புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஏப்ரல் 4, 2013 | புரட்சி 12 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00

## சாம்பலாகட்டும், மனு சாஸ்திரம்!

ஏப்.14இல் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளில் –

ஜாதியை நியாயப்படுத்தும் – பெண்களை இழிவு படுத்தும் – பார்ப்பன ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் – உழைக்கும் மக்களை அவமதிக்கும் மனு சாஸ்திரத்தை தீயிட்டு எரிக்கும் போராட்டம்!

தோழமை அமைப்புகளின் ஆதரவு – பங்கேற்போடு – திராவிடர் விடுதலைக் கழகம் களமிறங்குகிறது.

- போராட்டத்துக்கு தலைவர்களாக பெண்களையே தேர்வு செய்யுங்கள்;
- மனு சாஸ்திரக் கொடுமைகளை துண்டறிக்கை களாக பரப்புங்கள்;
- முக்கியப் பகுதிகளில் போராட்டத்தை விளக்கிடும் அறிவிப்புப் பதாகைகளை நிறுவுங்கள்;
- தோழமை அமைப்புகளை நேரில் சந்தித்து போராட்டத்தில் பங்கேற்க அழையுங்கள்;
- காவல்துறைக்கு முன்கூட்டியே தகவல் தாருங்கள்!
- எரிப்புப் போராட்டம் நடத்தும் முன்பு, மனு சாஸ்திர–ஜாதி–தீண்டாமைக் கொடுமைகளை தோழமை அமைப்புகளோடு விளக்கிப் பேசுங்கள்; அவர்கள் பெயர்களையும் போராட்ட அறிவிப்பில் இணைத்திடுங்கள்!
- போராட்டத்தை விளக்கி தெருமுனைக் கூட்டங் களையும் வாய்ப்புள்ள பகுதிகளில் பொதுக் கூட்டங் களையும் நடத்துங்கள்;

மனுவின் வாரிசுகள் – இன்று பல்வேறு வடிவங் களில் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் ஜாதி–தீண்டாமை வெறியைத் தூண்டி விடுகிறார்கள்; ஜாதி மறுப்பு திருமணங்களை கொச்சைப்படுத்து கிறார்கள்.

அதே நேரத்தில் காலாவதியாகிப் போன பழமைக் கருத்துகளை உயர்த்திப் பிடிக்கும் இந்த கற்கால பிரமுகர்களுக்கு எதிராக முற்போக்கு அணிகளின் குரல்கள் உரத்து ஒலிக்கத் தொடங்கிவிட்டன.

இது தலைதலைமுறையாக நடந்து வரும் சமூகப் போராட்டம்.

இந்த வரலாற்றுப் போராட்டத்தை திராவிடர் விடுதலைக் கழகம் இலக்கு நோக்கிய பார்வையில் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதும், அதில் நாம் ஒவ்வொருவரும் ஒரு போராளியாக செயல் பாட்டாளராக வீதிக்கு வந்து நிற்பதும் நமக்குக் கிடைத்துள்ள பெருமை; நல் வாய்ப்பு!

எரிப்புப் போராட்டம் அமைதியாக மக்களை சிந்திக்கச் செய்யும் போராட்டமாக நடக்கட்டும்!

தீ வைத்து எரிக்கும் இடம் அருகே வாளிகளில் தண்ணீரை நிரப்பி வைத்துக் கொள்ளுங்கள்.

பொது சொத்துகளுக்கு சேதமின்றி அறிவு ஆசான் பெரியார் நடத்திய வழியில் போராட்டத்தை நடத்துவோம்!

பெரியார் எதிர்த்த மனு சாஸ்திரம்;

அம்பேத்கர் எரித்த மனு சாஸ்திரம்;

சுயமரியாதை கூட்டங்களில் எரித்த மனு சாஸ்திரம்;

– இதோ, ஜாதி–தீண்டாமைக்கு எதிரான அவர்களின் வாரிசுகளால் மீண்டும் எரியப் போகிறது!

இது ஏதோ காகிதங்களின் எரிப்பு அல்ல!

மக்கள் சிந்தனையில் மடிந்து கிடக்கும் பழமை வாதத்துக்கு வைக்கப்படும் நெருப்பு!

ஜாதிய தீண்டாமை வெறிக்கு – பெண்ணடிமைக்கு மூட்டப்படும் நெருப்பு!

தயாராவீர்! தயாராவீர்!!

## ஊடகம்-திரைத்துறையின் கவனத்தை ஈர்க்கிறது ஜாதி-தீண்டாமை கொடுமைகள்

ஜாதி-தீண்டாமைக்கு எதிராக திராவிடர் விடுதலைக் கழகம் எடுத்துவரும் தொடர்ச்சியான இயக்கங்கள், இப்போது பரந்த அளவில் விவாதத்துக்கு வந்துவிட்டது. இரட்டை தம்ளர், இரட்டை சுடுகாடு என்று பட்டியலிட்டு கழகம் பரப்புரையிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டபோது கண்டும் காணாமல் ஒதுங்கி நின்றன ஊடகங்கள்! இப்போது மெல்ல மெல்ல மாறத் தொடங்கி விட்டது. இது கழகம் மேற்கொண்ட பெரியாரின் அடிப்படை லட்சியங்களுக்குக் கிடைத்த வெற்றி என்று ஒவ்வொரு கழகத் தோழனும் பெருமைப்படலாம். அதற்கு முழு உரிமை உண்டு. உதாரணமாக, மார்ச் 31 அன்று ‘விஜய்’ தொலைக்காட்சி நடத்திய ‘நீயா-நானா’ விவாதத்தில் இடம் பெற்ற தலைப்பு ‘ஜாதி-தீண்டாமை’ தொடர்பானதாகும். ஜாதி-தீண்டாமை காரணமாக அடக்குமுறைகளை சந்தித்த ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்த தம்பதிகள் இதில் பங்கேற்றனர். திரைப்பட இயக்குனர்கள் சக்தி பாலாஜி, சேரன், எவிடென்சு நிறுவனம் வழியாக தீண்டாமையை அம்பலப்படுத்தி வரும் கதிர், பேராசிரியர் கல்வி மணி உள்ளிட்ட பலரும் விவாதத்தில் பங்கேற்றனர்.

கண்பார்வையற்ற ஒரு தலித் அல்லாத பெண், கண்பார்வையற்ற தலித் ஒருவரை காதலித்து திருமணம் செய்து கொண்டதற்காக தனது சொந்த குடும்பத்தினரிடமே சந்தித்த புறக்கணிப்பு, எதிர்ப்பு, பகைமையை வெளிப் படுத்தினார். தனது தாயாரே தலித் கணவரிட மிருந்து கட்டாயப்படுத்தி பிரித்து, வீட்டில் தனக்கு நஞ்சு கொடுத்து, சாகடிக்க முயன்ற சம்பவத்தை அவர் கூறினார். பார்வை யற்றவர்களாக, உடல் ஊனமுற்றவர்களையும், ஜாதி கழுகுப்பார்வையுடன் அவர்களைத் துரத்தியிருக்கிறது.

மற்றொரு பெண் கூறிய அனுபவம் அதிர்ச்சியலைகளை உருவாக்கியது. ஆசிரியை பயிற்சி முடித்த அந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துப் பெண், ஒரு தலித் இளைஞரை காதலித்து திருமணம் செய்ய விரும்பினார். அந்தப் பெண்ணின் கிராமமே, ஜாதி வெறியோடு இதை எதிர்த்தது. பெண்ணின் குடும்பமும் அதில் சேர்ந்து கொண்டது. எதிர்ப்புகளை மீறி குடந்தை அரசன் என்ற தலித் தலைவர் தலைமையில் அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். உயிருக்கு அஞ்சி ஊரை விட்டு வேறு வேறு ஊர்களுக்கு அவர்கள் ஓடிக் கொண்டே இருந்தார்கள். கிராம ஜாதி வெறிக் கூட்டம் ஒவ்வொரு ஊராக அவர்களைத் தேடித் தேடி வந்தது. ஒரு கட்டத்தில் வெளியூர்களில் போதிய வருமான மின்றி வாழ்க்கையை நடத்த முடியாத அந்த தம்பதிகள் துணிந்து, சொந்த ஊருக்கே போய் ஏதேனும் பிழைப்பை நடத்தலாம் என்று வறுமையின் காரணமாக முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார்கள். அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. கிராமத்துக்கு வந்தவுடன், ஜாதி வெறியர்கள் அந்த தலித் இளைஞனை கடத்திப் போய் கொலை செய்து விட்டார்கள் என்று அந்த இளம் பெண் கூறியபோது, நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருமே அதிர்ந்து போய் கண்ணீர் சிந்தினர். தற்போது அந்தப் பெண்ணுக்கு ஊரில் கூலி வேலை தருவதற்குக் கூட சொந்த ஜாதிக்காரர்கள் மறுக்கிறார்கள். அந்தப் பெண்ணுக்குப் பிறந்த பெண் குழந்தையைக்கூட, தலித்துக்குப் பிறந்தவள் என்று கூறி, கொலை செய்யப் போவதாக மிரட்டி வருகிறார்கள் என்றார், சோகத்தை தனது முகத்தில் சுமந்து கொண்டிருந்த அந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த கிராமத்துப் பெண்.

தமிழகம் இப்படித்தான் இருக்கிறதா என்று வியப்போடு கேட்டார், நிகழ்ச்சி தொகுப்பாளர். அப்படித்தான் இருக்கிறது என்று பல்வேறு சான்றுகளை பட்டியல் போட்டுக் காட்டினார் எவிடென்சு கதிர்.

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் தலித் மக்களை ஒதுக்கி வைக்க தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டி னார். கிணற்றுக்குள் மூழ்கப் போகிறவர்கள் அதன் சுவரில் 10 அடி தூரத்தில் ஒருவரும், 15 அடி தூரத்தில் ஒருவரும், 20 அடி தூரத்தில் ஒருவரும் இருக்கும்போது அவரை மீட்பதற்கு 10 அடி தூரத்தில் உதவி கேட்டு தொங்கிக் கொண்டிருப்பவருக்கு 10 அடி கயிறும், 15 அடி தூரத்தில் தொங்கிக் கொண்டிருப்பவருக்கு 15 அடி கயிறும் தேவைப்படுவதுபோல் வெவ் வேறு அளவில் இடஒதுக்கீடு தேவைப்படுகிறது. இந்த சமூக நீதியை ஜாதியவாதிகள் ஏற்க மறுக்கிறார்கள். ஏன் அனைவருக்கும் சமமான கயிறு வழங்கவில்லை என்று எதிர்க்கிறார்கள் என்றார் எவிடென்சு கதிர்.

பேராசிரியர் கல்விமணி பேசும்போது:

“மேல்” ஜாதியைச் சார்ந்த பெண்கள், தலித் ஆண்களைத் திருமணம் செய்யும்போதுதான் இந்த ஜாதியவாதிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கொலை செய்யும் அளவுக்கு ஜாதி வெறி தலைதூக்கி நிற்கிறது. உண்மையில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் இந்த தலித் மக்களுக்கு உளவியல் ரீதியாகக் கிடைத்துள்ள மிகப் பெரிய ஆயுதம். இந்தச் சட்டத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கு சமுதாய இயக்கங்கள் போராட வேண்டும். திண்டிவனத்தில் இருளர் சமுதாயத்தினருக்கு எதிராக நடத்தப்படும் வன்முறையில், வன் கொடுமை தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று தொடர்ச்சியாக நாங்கள் களத்தில் போராடினோம். இன்று வன் கொடுமை தடுப்புச் சட்டம் பாய்ந்து விடும் என்று ஜாதியவாதிகளுக்கு எங்கள் பகுதியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. அந்த நிலையை உருவாக்கியுள்ளோம். சிலர் காதல் திருமணங்களை நாடகத் திருமணங்கள் என்று கூறுகிறார்கள். அது சரியல்ல. காதல் என்பது மனித உயிர்களின் இயற்கையான உணர்வு. அந்த உணர்வு இல்லாத எவருமே கிடையாது. காதல் திருமணம் தான் இயற்கையான திருமணம். உண்மையில் நாடகத் திருமணம் என்பது, ஏற்பாடு செய்யப்படும் திருமணங்கள்தான். அதில் தான் பெண் பார்ப்பது, ஜாதி பார்ப்பது, ஜாதகம் பார்ப்பது, வரதட்சணை கேட்பது, சடங்குகளை செய்வது, உறவுமுறைகளுக்கான சடங்குகள் என்று செயற்கையாக கட்டமைக்கப் பட்ட காட்சிகளோடு திருமணம் நடைபெறு கிறது. இப்படி ஜாதிக்குள் பெண் பார்த்து மாப்பிள்ளை பார்த்து ஏற்பாடு செய்யும் திருமணம் தான் நாடகத் திருமணம் என்றார் கல்வி மணி.

நிகழ்ச்சியில் பேசிய ஒரு சமூக ஆய்வாளர், ஜாதி தோன்றிய காலத்தில் தீண்டாமை தோன்றவில்லை. புத்தர் காலத்திலும், அதற்குப்

3 ஆம் பக்கம்

# ‘மனு சாஸ்திரம்’ பெண்கள் மீது சுமத்தும் இழிவுகளைப் பாரீர்!

“கணவன் துராசாரமுள்ளவனாக” (ஒழுக்கக்கேடுகள் உள்ளவனாக) இருந்தாலும் அன்னிய ஸ்திரீலோலனாக (வேறு பெண்களோடு செக்ஸ் வைத்துக் கொள்ள துடிப்பவன்) இருந்தாலும், பதிவிரதைகளான பெண் என்பவள், அந்தக் கணவனை தெய்வத்தைப்போல் வணங்க வேண்டும்.” (மனு சாஸ்திரம், அத்.5, சுலோகம் 154)

- ‘மனு சாஸ்திரம்’ கட்டமைத்த இந்த சிந்தனைதான் இப்போதும் சமூகத்தின் மனநிலையாக படிந்து கிடக்கிறது.

• மனைவியைக் கொடுமைப்படுத்தும் கணவன்; வேறு பெண்களோடு குடும்பம் நடத்தும் கணவன்; இவர்களோடு ஒரு பெண் சேர்ந்து வாழ வேண்டிய அவசியமில்லை. விவாகரத்துப் பெறலாம் என்று சட்டம் கூறுகிறது. ஆனால், சட்டம் வழங்கியுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி, விவாகரத்துப் பெற்ற பெண்ணை சமூகம் நேர்மைக்கு, தன்மானத்துக்குப் போராடிய பெண்ணாக வாழ்த்துகிறதா? இல்லை. “புருஷனோடு வாழத் தெரியாதவள்; அனுசரித்துப் போகத் தெரியாத அடங்காப் பிடாரி; வாழாவெட்டி; புருஷனையே தூக்கிப் போட்டுவிட்டு வந்தவள்; எப்படி ஒழுக்கமாக இருப்பாள்?” - என்றுதான் குடும்பமும் அவளைச் சுற்றியிருக்கும் சமூகமும் பேசுகிறது. சட்டம் விவகாரத்து உரிமையை வழங்கினாலும், அதைப் பயன்படுத்துவோரை சமூகம் எள்ளி நகையாடி, அவமதிப்பதற்கு சட்டத்தை மீறிய மற்றொரு எழுதப்படாத சட்டம், சமூகத்தின் விதியாக இருக்கிறது. அது என்ன? அதுதான் நாம் மேலே எடுத்துக்காட்டியுள்ள காலங்காலமாக மூளையில் திணிக்கப்பட்டுள்ள “மனு சாஸ்திரம்”.

“பெண்கள் குழந்தைகளாக இருக்கும்போது தகப்பனாரின் கட்டுப்பாட்டிலும் திருமணமான பிறகு கணவனின் கட்டுப்பாட்டிலும் கணவன் இறந்த பிறகு, பிள்ளைகளின் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டுமே தவிர, பெண்கள், தாங்கள் விரும்புகிறபடி (சுயமாக சிந்தித்து) ஒரு போதும் இருக்கக் கூடாது.” (மனு சாஸ்திரம் அத்தியாயம் 5, சுலோகம் 148.)

• ஒரு பெண் தனது சுய சிந்தனையோடு தன் விருப்பத்தின்படி பிறப்பு முதல், இறப்பு வரை வாழ்வதற்கான உரிமையை மறுக்கிறது மனு சாஸ்திரம். ஆனால், அரசியல் சட்டம் ஒரு பெண்ணுக்குள்ள உரிமையை குடி மக்களுக்கான உரிமையாக ஆண்களுக்குள்ள சமமான உரிமைகளாக உறுதி செய்கிறது. ஆனால், சட்டம் வழங்கும் இந்த உரிமையை சமூகம் ஏற்கிறதா? இல்லை; இல்லவே இல்லை. பெற்றோர் பார்க்கும் மாப்பிள்ளையையே பெண் ஏற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறாள். பெண் விரும்பியவனை திருமணம் செய்ய வேண்டும் என்றால், ஜாதி, அந்தஸ்துகளைக் காரணம் காட்டி, குடும்பம் அனுமதிக்க மறுக்கிறது. குடும்பத்தை மீறி திருமணம் செய்து கொண்டால், குடும்பத்தை விட்டு ஒதுக்கப்படுகிறாள். பெண்ணோ அல்லது காதலனோ கொலை செய்யப்படுகிறார்கள். பெண்ணுக்கு குடும்ப சொத்தில் உரிமை கிடையாது என்று பெற்றோர்கள் மறுத்து வருகிறார்கள். நன்றாக கவனியுங்கள்; ஒரு பெண்ணுக்கு சுயமாக சிந்திக்க, செயல்பட சட்டப்படி உரிமை உண்டு. ஆனால், அந்த சட்டங்களை சமூகம் மதிக்கத் தயாராக இல்லை. பெற்றோர், கணவர், மகன், கட்டுப் பாட்டில் அவர்கள் கட்டளைகளை ஏற்பதுதான் ஒரு ‘சிறந்த பெண்’ணின் அடையாளமாக குடும்பம், ஜாதி சமூக உறவுகள் பார்க்கின்றன. ஏன்? மேலே குறிப்பிட்ட பெண் தன்னிச்சையாக செயல்படவே கூடாது என்கிற மனு சாஸ்திர புத்தி தானே?

“எந்த ஒரு பெண்ணுடனும் அவர் தாய், தங்கையாக இருந்தாலும் அவர்களுடன் தனியாக ஆண்கள் ஒன்றாக உட்காரக் கூடாது.” (மனு சாஸ்திரம் 2வது அத்தியாயம் 215 வது சுலோகம்).

• இப்படி தங்கை, தாயையே சந்தேகிக்கச் சொல்லும் மனு சாஸ்திரம், ஒருவனின் மனைவி, வேறு ஒருவரிடமும் உடலுறவு கொள்ளலாம் என்று கூறுகிறது.

“ஒருவனின் மனைவியிடத்தில் மனைவி இல்லாத ஒருவன் உறவு கொண்டு குழந்தையை உண்டு பண்ணலாம்.” (மனு சாஸ்திரம் அத்தியாயம் 9, சுலோகம் 52)

“ஆண் பிள்ளை இல்லாமல், ஒரு குலம் நசிந்து போனால், அப்போது அந்தப் பெண், தன் கணவர், மாமனார் முதலியோரின் உத்தரவு பெற்றுக் கொண்டு, தன் மைத்துனர் அல்லது தன் கணவனுக்கு ஏழு தலைமுறைக்குட்பட்ட பங்காளி களுடன் புணர்ந்து ஒரே ஒரு பிள்ளையை பெற்றுக் கொள்ள வேண்டும்.” (மனு அத்தியாயம் 9; சாஸ்திரம் 59)

- இப்படி பெண்ணை, பிள்ளைகளைப் பெற்றுத் தருவதற்கு வாரிசுகளை உற்பத்தி செய்வதற்கான ஒரு எந்திரம் என்ற அந்தஸ்தை மட்டுமே மனு சாஸ்திரம் வழங்குகிறது. அது மட்டுமல்ல, விபச்சாரத்தையும் அந்தப் பெண் விரும்பாமலே மனு சாஸ்திரம் அவள் மீது திணிக்கிறது.

இவையெல்லாமுமே இந்தியாவின் அரசியல் சட்டத்துக்கு எதிரானவை. குற்றங்களாக அறிவிக்கப்பட்டவை. ஆனால், சமூகம், ‘சொந்த பந்தங்கள்’ பெண்களை எப்படிப் பார்க்கிறது?

குழந்தையைப் பெற வேண்டியது பெண்; அந்தக் குழந்தையைப் பெற்றுக் கொள்வதா வேண்டாமா என்று தீர்மானிக்க வேண்டியதில் கணவன் மனைவி இருவருக்குமே உரிமை உண்டு. ஆனால், சமூகம் இதில் மனைவியின் விருப்பத்தை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. கணவன் விருப்பத்தையே கட்டளையாக ஏற்க வேண்டும் என்கிறது.

பெண்ணின் கடமை “பிள்ளை”களை அதாவது, ஆண் குழந்தைகளைப் பெற வேண்டும் என்றே மனு சாஸ்திரம் கட்டளையிடுகிறது. பெண் குழந்தைகள் பிறந்தது என்றாலே குடும்பம் அந்தப் பெண்ணை பழித் தூற்றுகிறது. விஞ்ஞானமோ குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தீர்மானிப்பது. ஆணின் ‘குரோமோசம்’ தான் என்று கூறுகிறது. ஆனால், குடும்பம் பெண்கள் மீதுதான் குற்றம் சுமத்துகிறது. பெண் குழந்தையை கருவிலேயே அழித்துவிடும் ‘பெண் சிசுக் கொலை’யை சட்டம் குற்றம் என்கிறது. ஆனால், தமிழ் நாட்டிலேயே பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஏன்?

பெண்கள் என்றாலே இழிவானவர்கள் என்று ‘மனு சாஸ்திரம்’ சிந்தனையில் திணித்து வைத்துள்ள நச்சுகள் தானே!

சட்டங்கள் பல வந்தாலும் பெண்களை ‘மனு சாஸ்திரம்’ வழியாகவே இந்த ஜாதிய சமூகமும் குடும்பமும் பார்க்கிற சிந்தனை மாற்றப்பட வேண்டுமா? இல்லையா?

இதை எதிர்த்து மக்களிடையே ஒரு மாற்றுச் சிந்தனையை - மனமாற்றத்தை உருவாக்க வேண்டுமா இல்லையா? அதற்கு மனு சாஸ்திர பார்ப்பனிய சிந்தனைகள் அகற்றப்பட வேண்டுமா? வேண்டாமா?

அதற்குத்தான் ஏப்.14 மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம்!

தன்மானமுள்ள இழிவுகளை எதிர்க்கும் பெண்களும், ஆண்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்க அழைக்கிறோம்!

வாருங்கள், தோழர்களே! ஒன்று கூடி மனு சாஸ்திரத்தை எரிப்போம்!

# ‘மனு சாஸ்திரம்’ எழுதியது யார்? ஏன் எழுதப்பட்டது?

மனு சாஸ்திரம், சமஸ்கிருத மொழியில் எழுதப் பட்டது. 1919 ஆம் ஆண்டு இது முதலில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. மனு சாஸ்திரம் சமஸ்கிருதம் தெரிந்த “பிராமணர்களுக்கு மட்டுமே” தெரியும். இதை மாற்றி, ‘சூத்திரர்’கள், ‘பிராமணர்’களின் அடிமைகளாக வாழ வேண்டும் என்ற கருத்து அனைவருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகவே தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது. இப்படி தமிழில் இதை மொழி பெயர்க்க வேண்டும் என்று விரும்பி, அதற்கான செலவுகளை ஏற்க முன் வந்தது யார் தெரியுமா? புதுச்சேரியைச் சார்ந்த நா. முத்துரங்க செட்டியார் என்ற ‘வைசியர்’ (பார்ப்பானுக்கு கீழே 3வது இடத்தில் இருப்பவர்). அவர் இந்தக் கோரிக்கையை யாரிடம் முன் வைத்தார்? திருவைந்திரபுரம்-கோமண்டூர் என்ற ஊரைச் சார்ந்த இராமானுஜ ஆச்சாரி என்ற வைணவப் பார்ப்பனரிடம்!

மொழி பெயர்த்தப் பிறகு பிழை திருத்தியவர் முத்துக் கோவிந்த செட்டி மற்றும் பு.க. சுப்பராய முதலி என்ற வர்ணாஸ்ரமத்தை ஏற்றுக் கொண்ட பார்ப்பன அடிமைகள்.

சென்னை பத்மநாப விலாச அச்சகத்தில் 1919 இல் அச்சிடப்பட்டு இரண்டரை ரூபாய் விலைக்கு விற்பனைக்கு வந்தது.

இப்படி பார்ப்பனின் மனு சாஸ்திரத்தை தமிழர்களிடம் பரப்பிட துடித்தவர்கள்; பார்ப்பனரல்லாத பார்ப்பன அடிமைகள் தான்.

- ‘மனு சாஸ்திரம்’ என்ற சமுதாய ஒடுக்கு முறையை அதாவது பிராமணன் தலையி லிருந்தும், சத்திரியன் (போரிடுகிறவன்) தோளி லிருந்தும், வைஸ்யன் (வியாபாரம் செய்கிறவன்) தொடையிலிருந்தும் தோன்றியவர்கள். இவர்களில் ‘பிராமணன்’ முதலிடம்; சத்திரியன் இரண்டாவது இடம்; வைசியன் மூன்றாவது இடம். இந்த மூன்று பிரிவினரும் - இரு பிறப்பு கொண்டவர்கள். அதாவது முதலில் மனிதர்களாக பிறந்து, பிறகு பிறந்த வர்ணத்தின் அடிப்படையில் உயர்ந்தவர்களாகி விடு கிறார்கள். எனவே மூன்று பிரிவினரும் பூணூல் போடும் உரிமை கொண்டவர்கள். காலிலிருந்து பிறந்தவன் ‘சூத்திரன்’. இவன் மேற்குறிப்பிட்ட 3 பிரிவினருக்கும் அடிமையாக வாழ வேண்டும் என்கிறது மனு சாஸ்திரம்.

  இவர்கள் உலகை ‘படைத்த’ கடவுளான ‘பிரம்மா’வின் உடலிலிருந்து பிறந்தவர்கள் என்கிறது மனுசாஸ்திரம். அதாவது இந்த ஏற்றத் தாழ்வுகளை படைக்கும் போதே ‘பிரம்மா’வே நிர்ணயித்துவிட்டார் என்கிறது மனு சாஸ்திரம். ஆக கடவுள் ‘பிர்மா’ - இதை மனுவுக்கு தெரியப்படுத்தி, அந்த ‘மனு’ இதை மக்களுக்கு தெரியப்படுத்தினார். ‘மனு சாஸ்திரத்தை’ கடவுளின் கட்டளைகளாகவே மாற்றி, அதை மனு சாஸ்திரத்திலும் எழுதி வைத்துக் கொண்டனர்.

- அப்படி ‘பிரம்மா’வோடு நேரடியாகவே பேசிய ‘மனு’ என்பவன் யார்? இது பற்றி புரட்சியாளர் அம்பேத்கர் விரிவாக ஆய்வுகளை செய் துள்ளார்.

  பழங்கால இந்தியாவில் ‘மனு’ என்பது ஒரு மரியாதைக்குரிய பெயராக இருந்து வந்திருக்கிறது. அதற்காக ‘மனு’ என்ற பெயரில் இதை பார்ப்பனர்கள் பரப்பினார்கள். உண்மையில் இது ‘மனு’ என்ற ஒரு தனி நபரால் எழுதப்படவில்லை. ‘நாரத ஸ்மிருதி’ என்ற மற்றொரு நூலை எழுதிய சுமதிபார்க்கவா என்பவன்தான் மனுஸ்மிருதியை எழுதி, தன் பெயரை மறைத்துக் கொண்டு அந்த காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த ‘மனு’வின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டான் என்கிறார் அம்பேத்கர்.

- புத்த மதம், பார்ப்பனியத்தைக் கடுமையாக எதிர்த்தது. மவுரிய வம்சத்தைச் சார்ந்த ஆட்சியாளர்கள் புத்த மதத்தை அரசு மதமாக ஏற்றுக் கொண்டு பரப்பினார்கள். அசோக மன்னன் மவுரிய வம்சத்தில் வந்தவன்தான். அவன் புத்த மதத்தை அரசு மதமாக்கி, பார்ப்பனியத்தின் கொடுங்கோன்மையைத்

4 ஆம் பக்கம்

# ஜாதிவெறி அரசியலை முறியடிக்க வேண்டும் : மனுஷ்யபுத்திரன் வலியுறுத்தல்

*18.3.2013 அன்று கோவையில் நடந்த கழக மண்டல மாநாட்டில் உரையாற்றிய எழுத்தாளர் மனுஷ்ய புத்திரன், திராவிடர் விடுதலைக் கழகம், வரலாற்றில் முக்கிய சந்தர்ப்பத்தில் இந்த மாநாடுகளை நடத்தி வருகிறது என்று பாராட்டினார்.*

மாநாட்டின் துண்டறிக்கையில், 'தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு' என்று குறிப்பிட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், அந்தத் தமிழர் ஒற்றுமையை இப்போது தமிழகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஈழத் தமிழர்களுக்காக ஒற்றைக் குரலாக தமிழர்கள் எழுந்து நிற்கிறார்கள் என்றார்.

தமிழர் அடையாளம் நீண்ட காலமாக சிதைக்கப்பட்டு, தமிழர்கள் உரிமையிழந்து நின்றார்கள். மாமல்லபுரத்தில் நடந்த சித்ரா பவுர்ணமியில் பேசிய காடுவெட்டி குரு, ஜாதி மறுப்புத் திருமணம் செய்வோரின் கையை வெட்டுவோம் என்ற "கொள்கைப் பிரகடனத்தை" செய்தார். அடுத்த நாள் தொலைக் காட்சி ஒன்றில் நான் பேசியபோது, காடுவெட்டி குருவை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்று பேசினேன். இவர்கள் தமிழகத்தின் வரலாற்றை பல நூற்றாண்டுகாலம் பின்னோக்கி இழுத்துச் செல்லத் துடிக்கிறார்கள். இந்த ஜாதிய வாதிகள், தமிழ் மற்றும் முற்போக்குவாதிகள் என்ற முகமூடிகளை அணிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை எதிர்த்துப் போராடி, உண்மை அடையாளத்தை அம்பலப்படுத்த இது தான் சரியான தருணம்.

ஜாதி மறுப்பு திருமணம் செய்வோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதற்கு கவுரவக் கொலை என்று பெயர் சூட்டுகிறார்கள். ஊரில் ஜாதி பஞ்சாயத்து கூடி, சாதி மறுப்பு காதல் திருமணம் புரிந்தவர்களை பிரித்து வைக்கிறது. தங்கள் மீது திணிக்கப்பட்ட ஜாதி-தீண்டாமை ஒடுக்குமுறைகளை எதிர்த்து, தலித் மக்கள் குரல் கொடுக்கிறார்கள். தங்களுக்கான அரசியல் பின்புலம் உருவாகியுள்ள சூழலைப் பயன்படுத்தி துணிவுடன், அவர்கள் தட்டிக் கேட்கிறார்கள்.

அடங்கிக் கிடந்தவர்கள் உரிமைக்குக் குரல் கொடுக்கத் தொடங்கும்போது ஜாதி ஆதிக்க வாதிகள் அதைப் பொறுக்க முடியாமல் கலவரம் செய்கிறார்கள். பழிவாங்கும் அரசியலை நடத்துகிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஜாதியின் அடிப்படையில் அமைப்பை உருவாக்கி, அவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக போராடியபோது அந்த ஜாதிய அரசியலை நான் அப்போது வரவேற்றேன். அந்த உரிமைகளுக்கான அடையாள அரசியல் திசை மாறி ஜாதி அரசியலாகிவிட்டது. அது வன்மத்தை கக்குகிறது.

இந்த ஜாதிய அரசியல் மேல்மட்ட - படித்த - நகர்ப்புற மனிதர்களிடமும் இருக்கிறது. அவர்கள் ஜாதி வெறுப்புடன் செயல்பட்டு, சமுதாயத்தை பின்னோக்கி இழுத்துச் செல்கிறார்கள்.

அந்த ஜாதி வெறி அரசியலை ஒவ்வொருவரும் முனைப்போடு முறியடிக்க வேண்டும் என்ற செய்தியைத்தான் இந்த மாநாடு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த நியாயமான ஜாதி வெறி எதிர்ப்புக்கு நான் உங்களோடு இணைந்து நிற்பேன் என்றார் மனுஷ்யபுத்திரன். ✦

முதல் பக்கத் தொடர்ச்சி

பிறகும் ஜாதி இருந்ததே தவிர தீண்டாமை இல்லை. எனவே ஜாதியையும் தீண்டாமையையும் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று வாதிட்டார். அப்படி பார்க்க முடியாது என்பதே உண்மை நிலை. தீண்டப்படாதவன் யார் என்பதை அவன் பிறந்த ஜாதி தான் நிர்ணயிக்கிறது.

சமூகத்தில் புரையோடிப் போய் நிற்கும் ஜாதி-தீண்டாமை வெறிப் போக்கை ஊடகங்கள் மூடி மறைத்த நிலையில், விஜய் தொலைக்காட்சியின் 'நீயா நானா' விவாதங்கள் இப்போது அவற்றை வெளிச்சப்படுத்தத் தொடங்கியுள்ளன.

இந்த நிகழ்வின் முத்தாய்ப்பாகக் குறிப்பிடப்படவேண்டியது - இந்த சிறப்பு விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டதற்கான காரணம் தான். தமிழ்த் திரையுலகில் நல்ல திரைப்படங்களை வழங்கி வரும் நடிகர் பிரகாஷ் ராஜ், ஜாதி-தீண்டாமைப் பிரச்சினையை முன் வைத்து 'கவுரவம்' என்ற திரைப்படத்தைத் தயாரித்துள்ளார். பிரகாஷ் ராஜின் 'மொழி' போன்ற பல வெற்றிகரமான படங்களை இயக்கிய இயக்குனர் ராதாமோகன், இந்தப் படத்தையும் இயக்கியுள்ளார். கிராமங்களில் இன்றும் நீடிக்கும் தீண்டாமைக் கொடுமைகளை முன்வைத்து ஜாதிக்கு எதிராக இத் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரகாஷ்ராஜ் கூறினார். பிரகாஷ் ராஜ், இயக்குனர் ராதா மோகன், படத்துக்கு பாடல்கள் எழுதிய கவிஞர் வைரமுத்துவின் மகன் கார்க்கி ஆகியோரும் இதில் பங்கேற்றனர். படத்தின் சில காட்சிகளும் ஒளி பரப்பப்பட்டன. இந்தப் படத்துக்கான பாடல்களை வெளியிடுவதற்காக இந்த 'நீயா நானா' நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. பாடல்களுக்கான இசைக் குறுந்தகட்டை, நிகழ்ச்சியில் ஜாதி வெறியால் பாதிக்கப்பட்ட கண்பார்வையற்ற தம்பதியினரும், ஜாதிவெறிக்கு கணவனை பறிகொடுத்த பெண்ணும் நடிகர் பிரகாஷ்ராஜ் வேண்டுகோளை ஏற்று வெளியிட்டபோது, அந்த நிகழ்ச்சி உள்ளத்தைத் தொட்டது.

ஜாதி-தீண்டாமை அவலங்கள், மெல்ல மெல்ல நகர்ந்து தொலைக் காட்சிகளின் விவாதப் பொருள்களாகவும் திரைப்படங்களாகவும் மக்கள் மன்றத்தின் கவனத்துக்கு வரத் தொடங்கியிருப்பது திராவிடர் விடுதலைக் கழகம் எதிர்நீச்சல் போட்டு முன்னெடுத்த கொள்கைப் பயணத்துக்குக் கிடைத்த வெற்றியேயாகும்.

**– நமது செய்தியாளர்**

## சட்டசபை தீர்மானத்தை வரவேற்று கழகம் சுவரொட்டி

*தமிழக சட்டமன்றத்தில் ஈழத் தமிழர் விடுதலைக்காக முதலமைச்சர் கொண்டு வந்த தீர்மானத்துக்கு நன்றி தெரிவித்து மாவட்ட கழக சார்பில் கீழ்க்கண்ட சுவரொட்டிகள் சென்னையில் ஒட்டப்பட்டன.*

*இந்திய அரசே; இலங்கை நட்பு நாடல்ல;*

*உலகத் தமிழர்களின் உணர்வுகளை அங்கீகரித்து சட்டமன்றத் தீர்மானமாக்கி வரலாறு படைத்த தமிழக முதல்வருக்கு நன்றி; நன்றி; நன்றி!*

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

# ஜாதி எதிர்ப்புப் பரப்புரைக் குழுவினருக்குப் பேராதரவு

*சென்னை மண்டல திராவிடர் விடுதலைக் கழக சார்பில் மனித நேயத்தை மறுக்கும் மனுசாஸ்திரத்தை எரிப்போம்; எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் என்று சமத்துவம் முழங்கும் இளைஞர்களின் பரப்புரைப் பயணம் மார்ச் 15, சென்னை அம்பத்தூரில் தொடங்கி மார்ச் 24 காஞ்சிபுரத்தில் நிறைவடைந்தது. இந்த பரப்புரைப் பயணம் திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், காஞ்சிபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் பத்து நாட்கள் நடந்தன. துவக்கப் பொதுக் கூட்டம் சென்னை சூளையில் 14.3.2013 அன்று நடைபெற்றது. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

19-20-21 தேதிகளில் பயணத்தில் விழுப்புரம் மாவட்ட கழகத் தோழர்கள் ச. பெரியார் வெங்கட், ச.சா. இளையராசா, செ.பிரபு, செ.நாவாப்பிள்ளை, ம.குமார், மு.நாகராஜ், திருநாவுக்கரசு, சி.சாமிதுரை ஆகியோர் பங்கேற்றனர்.

22.3.2013 அன்று காலை 9 மணியளவில் செஞ்சி காமராஜர் சிலையருகில் பரப்புரை நடைபெற்றது. தி.மு.க. செஞ்சி நகரத் தலைவர் மஸ்தான் பங்கேற்றுப் பேசினார். காலை 11.30 மணியளவில் வளாத்தி பேருந்து நிறுத்தம் அருகில் பரப்புரை நடைபெற்றது. இதில் தி.மு.க. மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் ப.நெடுஞ்செழியன் தோழர்களை வரவேற்றுப் பேசினார். வளத்தியில் ஈழ விடுதலையை வலியுறுத்தி, அரிகுமார் தலைமையில் இளைஞர்கள் நடத்திய போராட்டத்துக்கு பயணக் குழுவினர் வாழ்த்து தெரிவித்தனர். அப்போது அரிகுமார் தோழர்களிடம் நான் பிறப்பில் முதலியார் சமுதாயத்தைச் சார்ந்தவன். ஆனால், நான் சாதி மறுப்பு திருமணமே செய்வேன் என்று உறுதி கூறினார். பிற்பகல் 1 மணிக்கு மேல்மலையனூர் பேருந்து நிலையத்திலும் மாலை 4.30 மணியளவில் அவலூர் பேட்டை பேருந்து நிறுத்தத்திலும் பரப்புரை நடைபெற்றது. இதில் எறும்பூண்டி கிராமத்தைச் சார்ந்த இருபது தோழர்கள் ம.வினோத் தலைமையில் கழகத்தில் இணைந்தனர். மாலை 7 மணிக்கு சேத்துப்பட்டு பேருந்து நிறுத்தம் அருகில் பரப்புரை நடைபெற்றது. இதில் தமிழர் வாழ்வுரிமை கட்சியைச் சார்ந்த சுந்தரசேகர் பங்கேற்றுப் பேசினார். தோழர்கள் தங்குவதற்கும் இரவு மறுநாள் காலை உணவுக்கும் ஏற்பாடு செய்தார்.

23.32013 காலை 10 மணிக்கு தேசூரில் ஈழ விடுதலையை வலியுறுத்தி வியாபாரிகள் கடையடைப்பு நடத்தி போராட்டம் நடத்தினர். அவர்களுக்கு பயணக் குழுவினர் போராட்ட மேடைக்குச் சென்று வாழ்த்து தெரிவித்தனர். பின், காலை 11 மணிக்கு மழையூரிலும், பிற்பகல் 3 மணிக்கு வந்தவாசி பேருந்து நிலையத்திலும், மாலை 5 மணிக்கு மானாவதி பேருந்து நிறுத்தத்திலும், மாலை 6.30 உத்திரமேரூர் பேருந்து நிறுத்தத்திலும் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவுக்கு ஆசிரியர் தமிழரசன் ஏற்பாடு செய்தார். தோழர்கள் இரவு தங்குவதற்கும், இரவு உணவு, அடுத்த நாள் காலை மதிய உணவுக்கு சென்னை கழகத் தோழர் வேலு ஏற்பாடு செய்தார்.

24.3.2013 காலை 10 மணிக்கு நெல்வா கூட் ரோடு காலை 11.30 படாளம் கூட் ரோடு பிற்பகல் 1 மணிக்கு செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்திலும், பிற்பகல் 3 மணிக்கு வாலாஜாபாத்திலும், மாலை 5 மணியளவில் காஞ்சிபுரம் தேரடி வீதியிலும் பரப்புரை நடைபெற்றது. பின் காஞ்சிபுரம் பெரியார் சிலை அருகில் பரப்புரையை நிறைவு செய்து காஞ்சிபுரம் பொதுக் கூட்டத்துக்கு பயணக் குழுவினர் வந்து சேர்ந்தனர். இறுதிநாள் பயண நிகழ்வில் வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, அருண் ஆகியோர் பங்கேற்றுப் பேசினர்.

காஞ்சியில் பயணத்தின் பரப்புரையில் கழகப் பொறுப்பாளர்கள் டார்வின் தாசன், தினேஷ், செல்வகுமார், தட்சணா மூர்த்தி, ரவி பாரதி, முனுசாமி, அருண் ஆகியோர் பங்கேற்றனர். பயணத்தின் முதல் நாள் பங்கேற்று, அருள்தாசு சாதி ஒழிப்புப் பாடல்கள் பாடினார். தொடர்ந்து இறுதிவரை பங்கேற்ற தோழர் செந்தில் ஒவ்வொரு நிகழ்விலும் சாதி ஒழிப்புப் பாடல்களை பாடினார். அனைத்து பரப்புரைக் கூட்டங்களிலும் இரா. உமாபதி, க. இராமர், ந. அய்யனார் ஆகியோர் உரையாற்றினர். பயணத்தில் இரா. உமாபதி, இலட்சுமணன், யேசுகுமார், செங்குட்டுவன், க.ராமர், கோபி, மருதமூர்த்தி, மேடவாக்கம் சக்திவேல் தனது மகன் விஜய்யுடனும், வேலு, முழக்கம் உமாபதி, சாக்ரடீசு, சேகர், பழனிப் பகுதித் தோழர்கள் சிவா, எம். கார்த்தி, வே. ஆனந்த், எம். பரத் குமார், கவிராஜ், சென்னை செந்தில், விழுப்புரம் ந.அய்யனார் ஆகியோர் பங்கேற்றனர். தோழர்கள் சோர்வின்றி ஆங்காங்கே கிடைத்த ஆதரவால் உற்சாகத்தோடு பயணத்தில் பங்கேற்றனர். வாகன ஓட்டுனர்கள் சண்முகம் (உடல்நலக் குறைவு ஏற்பட்ட நிலை யிலும்), கோவிந்தன் ஆகியோர் தோழர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி கடமையாற்றினர்.

**செய்தி : அய்யனார்**

# பொது புத்தியில் புதைந்து கிடக்கும் மனு சாஸ்திரம்

- ‘மனு சாஸ்திரம்’ இப்போது செத்துவிட்டது என்று கூறலாமா? முடியாது. இன்னும் மனு சாஸ்திரத்தின்படி ‘பிரம்மா’ முகத்தில் பிறந்ததாகக் கூறப்படும் “பிராமணன்” இருக்கிறான். ‘பிராமணன்’ என்ற வர்ணாஸ்ரம அடையாளத்தையே பார்ப்பனர்கள் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். அய்யர், அய்யங்கார், சர்மா, சாஸ்திரி என்று ‘பிராமணர்’களுக்குள் ஜாதிகள் வந்து விட்டாலும், இப்போதும் அவர்கள் “பிராமணர்” என்றே அழைக்கப்படுகிறார்கள். **இது மனு சாஸ்திரம் தானே!**

- சத்திரிய, வைஸ்ய, சூத்திரப் பிரிவுகள் ஜாதிகளாகப் பிரிந்து போய் கிடக்கின்றன. ஒரு ஜாதி மற்றொரு ஜாதியிடம் திருமண முறை கூடாது என்று கொடிபிடித்து நிற்கிறது. ஆனால், பிளவுபட்டுக் கிடக்கும் இந்த ஜாதிகள், தங்களுக்கான வைதிகச் சடங்குகளை “பிராமணர்களே” நடத்த வேண்டும் என்று விரும்பி அழைக்கிறார்கள். - **இது மனு சாஸ்திரம் தானே!**

- சமுதாய மாற்றத்தில் ஒவ்வொரு வர்ணாஸ்ரமப் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்ட தொழில்கள் மாறிப் போய்விட்டன. வேதம் ஓதுவோர் அமைச்சர் பதவியையும் உயர் அதிகாரிகள் பதவியையும் ஏற்று, தொழிலால் ‘சத்திரியன்’ ஆனாலும், பிறப்பால் ‘பிராமணனாகவே’ காயத்திரி ஓதி, ‘உபநயனம்’ செய்து கொள்கிறான். - **இது மனு சாஸ்திரம் தானே!**

- தொழில்களை தேர்வு செய்வதில் எவ்வளவோ மாற்றங்கள் வந்துவிட்டன என்பது உண்மைதான். “பிராமணன்”, ‘ரீபோக்’, ‘பேட்டா’ செருப்புக் கடையில்கூட வேலை செய்கிறான். ஆனால், கடவுளிடம் நெருங்கவும், பூஜை செய்யவும் ஜனாதிபதியிலிருந்து பிரதமர், முதல்வர்கள் வரை மண்டியிடும் அர்ச்சகர் தொழிலில் மட்டும் ‘பிராமணன்’ மட்டும் தானே இன்று வரை நீடிக்கிறான். அதை விட்டுக் கொடுக்காமல், உச்சநீதிமன்றம் வரை போய் மனு போடுகிறான். அதே நேரத்தில் இழிவிலும் இழிவான மலம் எடுத்தல், சாக்கடை சுத்தம் செய்தல், ‘பிணம் புதைத்தல்’ போன்ற “தொழில்”களில் - இன்று வரை தீண்டப்படாதவன் தானே நீடிக்கிறான்? ‘மலம்’ எடுத்து வந்தவன் அர்ச்சகனாகவும் அர்ச்சகனாக இருந்தவன், சாக்கடை சுத்தம் செய்பவனாகவும் மாறும் காலம் தானே - ‘மனு சாஸ்திரம்’ ஒழிந்துவிட்ட காலம். இது மாறாமல் நீடிப்பதற்கு காரணம் என்ன? - **மனு சாஸ்திரம் தானே!**

- ஒரு சமூகத்துக்கு உணவு, உடை, இருப்பிடம் மூன்றும் அத்யாவசியமானது. உணவு உற்பத்தியில் நாற்று நடும் பார்ப்பானையோ, பார்ப்பனப் பெண்களையோ; உடை தயாரிப்பில் தறி போடும் நெசவு செய்யும் பார்ப்பானையோ, பார்ப்பனப் பெண்களையோ; வீடு கட்டுவதில், சித்தாளாக, மேஸ்திரியாக, கம்பி கட்டுவோராக - பார்ப்பானையோ, பார்ப்பனப் பெண்களையோ எங்கேயாவது பார்த்ததுண்டா? இந்த உடல் உழைப்புத் தொழிலில் ஏன் மாற்றங்கள் வரவில்லை? -**மனு சாஸ்திரம் தானே!**

- எழுதப் படிக்கத் தெரியாதவர்களில் நூற்றுக்கு நூறு சதவீதப் பேரும் ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’களாக இருப்பதும், பார்ப்பனர்களில் ஒருவன்கூட தற்குறியாக இல்லாமல் போனதும், ஏதோ தற்செயலாக நடந்த விபத்தா? இதற்கு காரணம் என்ன? சூத்திரனுக்கு கல்வியைத் தடை செய்தது **மனு சாஸ்திரம் தானே!**

- கோயிலுக்குப் போவதிலும், பக்தி வழிபாடுகளிலும், விரதங்களிலும் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்கள் பெண்களாக இருந்தாலும் கோயில் கருவறைக்குள் நுழைவதற்கும் வேத மந்திரங்களை ஓதுவதற்கும் பெண்களுக்கு இன்று வரை தடை நீடிப்பது ஏன்? குடியரசுத் தலைவராகக் கூட வரலாம்; ஆனால், கோயிலில் அர்ச்சகராக கடவுளை நெருங்க முடியாது என்று பெண்களைத் தடுத்து வைத்திருப்பது எது? - **மனு சாஸ்திரம் தானே!**

புரையோடி புற்று நோயாகி சமூகத்தை அரித்துக் கொண்டிருக்கும் இந்த மனு சாஸ்திர சிந்தனைகள் எரிக்கப்பட வேண்டுமா? வேண்டாமா?

சிந்தியுங்கள் தோழர்களே! **(இரா)**

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**
**பத்திரிகையின் உரிமை விளக்க அறிவிக்கை**
படிவம் 4 (8வது விதி காண்க)

1. வெளியாகும் இடம் : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41.
2. வெளியாகும் காலம் : வாரம் ஒரு முறை
3. அச்சடிப்பவர் பெயர் : எஸ். தீமாஸ்
   இனம் : தமிழர்
   முகவரி லில்லி சூசை ஆப்செட்
   8 முகமது உசேன் சந்து, சென்னை–14.
4. பதிப்பாளர் பெயர் : க. இராசேந்திரன்
   இனம் : தமிழர்
   முகவரி : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41.
5. ஆசிரியர் பெயர் : க. இராசேந்திரன்
   இனம் : தமிழர்
   முகவரி : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரிகை உரிமையாளரும் கூட்டாளிகளும் பெயரும் முகவரியும் : இல்லை

நான் இதன் மூலம் மேலே காணப்படும் விவரங்கள் யாவும் எனக்குத் தெரிந்த வரை முற்றிலும் உண்மையென நம்பகமாக அறிவிக்கிறேன்.

(ஒப்பம்)
க. இராசேந்திரன்
வெளியிடுபவர் கையொப்பம்

நாள்: 04–04–2013
இடம்: சென்னை.

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ.200

# கன்னியாகுமரியிலிருந்து கூடங்குளம் நோக்கி ஏப்.20 இல் முற்றுகைப் பயணம்

30.3.2013 சனிக் கிழமையன்று புதுக்கோட்டை அம்பேத்கர்-பெரியார்-காரல் மார்க்ஸ் அரங்கில் “கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு” உறுப்பு அமைப்புகள் கூட்டம் முதன்மை ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

வருகிற ஏப்ரல் 20, சனிக் கிழமை, காலை 10 மணிக்கு, கூடங்குளம்-கல்பாக்கம் அணு உலைகளை இழுத்து மூட வலியுறுத்தி, மாணவர் - மீனவர், அணுஉலை எதிர்ப்பு அமைப்புகளும் இணைந்து “கன்னியாகுமரியிலிருந்து கூடங்குளம் நோக்கி முற்றுகைப் பயணம்” நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

கூட்டமைப்பில் துடிப்போடு செயலாற்றிய தமிழ்த் தேசக் குடியரசு இயக்க முன்னாள் ஒருங்கிணைப்பாளர் ஈரோடு மோகன்ராசு படுகொலை மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டமைப்புக் கூட்டத்தில் பங்கேற்க சென்னையிலிருந்து கிளம்பிய சேவ் தமிழ்ஸ் ஒருங்கிணைப்பாளர் செந்தில், தமிழ்நாடு மக்கள் கட்சி இணைச் செயலாளர் அருண்சோரி ஆகியோரை தடுத்துத் தாக்கிய சென்னை அசோக் நகர் காவல்துறையினருக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில், கல்பாக்கம் அணு உலை எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெற வாழ்த்துவதுடன், போராட்டக் குழுவினர் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறுவதுடன், கைது செய்யப் பட்டவர்களை விடுதலை செய்யவும் மக்கள் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

**செய்தி: மீ.த. பாண்டியன்**

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.200/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

தடுத்து நிறுத்தினான். மவுரியர்கள் ஆட்சி 140 ஆண்டுகள் நடந்தன. அப்போது பார்ப்பனர்கள் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

- மீண்டும் பார்ப்பன ஆட்சியை நிலைநாட்ட பார்ப்பனர்கள் நேரம் பார்த்திருந்தார்கள். உயிர்ப்பலி யாகங்களில் நம்பிக்கை கொண்ட சுங்க வம்சம் என்ற பார்ப்பன வம்சம் ஆட்சியைப் பிடித்தது. புஷ்யமித்திரசுங்கன் என்ற பார்ப்பான் அரசனாக வந்தான். அதிகாரத்தைப் பிடித்த சுங்க வம்ச பார்ப்பனர்கள், புத்தத் துறவிகளை தேடித் தேடிக் கொலை செய்தார்கள். ஒவ்வொரு புத்த துறவியின் தலைக்கும் 100 தங்கக் காசுகள் விலையாக அறிவிக்கப்பட்டது. புத்தர்களைக் கொன்று ஒழித்ததோடு மட்டுமல்லாமல், மக்களை அடிமைப்படுத்தும் பார்ப்பனக் கருத்துகளை கட்டளைகளாக சமூகத்தின் சட்டங்களாக்க விரும்பினர். அப்போது புஷ்யமித்திரன் ஆட்சியில் அரசின் சட்டமாக அறிவிக்கப்பட்டதுதான் ‘மனு சாஸ்திரம்’.

அதனால்தான் வேதத்தை பார்ப்பனியத்தை எதிர்த்து வந்த புத்தமதத் தவர்களை “வேத நிந்தனையாளர்கள்” என்று மனு சாஸ்திரம் கூறியதோடு அவர்கள் ஒழிக்கப்பட வேண்டியவர்கள். ஆபத்தானவர்கள், திருடர்கள் என்று வசை பாடுகிறது. வேத எதிர்ப்பாளர்களை அரசன் தனது எல்லையிலிருந்து வெளியேற்ற வேண்டும். (அத்.9: சுலோகம் 225) அரசனின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மாறு வேடத்தில் இவர்கள் பதுங்கி வாழ்கிறார்கள். இவர்கள் தீயவர்கள்; ஒழுக்கமற்றவர்கள் மக்களுக்கு கேடு செய்பவர்கள். (மனு-அத்.9; சுலோகம் 226)

“வேத எதிர்ப்பாளர்கள் அன்றாடக் கடமைகளை செய்யாதவர்கள்; இவர்களின் பிறப்பே வீண்; திருட்டுத்தனமாக சாதி மாறிப் பிறந்தவர்கள்; வேதத்தை கேள்வி கேட்டு நிந்தனை செய்யும் துறவிகளுக்கும் தற்கொலை செய்து கொண்டவர்களுக்கும் அவர்களின் ‘ஆத்மா’க்களுக்காக ‘தர்ப்பணம்’ (செத்தப் பிறகு ஆத்மா சாந்தியடைவதற்கான புரோகிதச் சடங்கு) செய்யக் கூடாது”. (அத்.5; சுலோகம் 89)


- என்று பவுத்தர்களுக்கு எதிராகவே மனு சாஸ்திரத்தில் பல ஸ்மிருதிகள் திணிக்கப்பட்டன.

எனவே, பவுத்த கொள்கைகளை ஒழித்து மீண்டும் வேத பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்ட வந்ததே மனு சாஸ்திரம்.

- இது புரட்சியாளர் அம்பேத்கர் தனது ஆய்வின் வழியாக கண்டறிந்த உண்மைகள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th April 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப் **பெரியார் முழக்கம்**

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஏப்ரல் 11, 2013 | புரட்சி 12 | முழக்கம் 13 | விலை: ரூ.3.00

## கோவையில் கொளத்தூர் மணி; பொள்ளாச்சியில் அதியமான்; சென்னையில் விடுதலை இராசேந்திரன்

# பெண்கள் தலைமையில் 20 மய்யங்களில் 'மனு சாஸ்திரம்' எரிப்பு

அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்.14 அன்று திராவிடர் விடுதலை கழகம், ஒத்த கருத்துகள் கொண்ட அமைப்புகளோடு இணைந்து மனு சாஸ்திர எரிப்புப் போராட்டத்தை நடத்துகிறது. கோவையில் நடக்கும் போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், சென்னையில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனும், பொள்ளாச்சியில் ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் அதியமானும் கலந்து கொள்கிறார்கள். அனைத்து பகுதிகளிலும் பெண்களே போராட்டத்துக்கு தலைமை ஏற்கிறார்கள்.

சென்னையில் தியாகராயர் நகர் தந்தை பெரியார் சிலை அருகே ஜா.ஜெயந்தி தலைமையில் எரிப்புப் போராட்டம் நடைபெறுகிறது.

காஞ்சிபுரத்தில் சங்கராச்சாரி மடத்துக்கு எதிரே கே.கன்யாகுமரி தலைமையில் எரிப்புப் போராட்டம் நடக்கிறது. விழுப்புரம் மாவட்டத் தோழர்கள் கல்லக்குறிச்சியில் அம்பேத்கர் திடலில் பரிமளா தலைமையில் எரிக்கிறார்கள். தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட நாகை மண்டல கழக சார்பில் மயிலாடுதுறை கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு நாகை மாவட்ட அமைப்பாளர் நவநீதம் தலைமையில் போராட்டம் நடக்கிறது.



தேனி, திண்டுக்கல், மதுரை மாவட்ட கழக சார்பில் ஒட்டன் சத்திரத்தில் மணிமேகலை தலைமையில் மனு சாஸ்திரம் எரிக்கப்படுகிறது. புதுக்கோட்டை, பெரம்பலூர், திருச்சி மாவட்டங்கள் சார்பில் திருச்சியில் காதி கிராப்ட் முன் நடக்கும் எரிப்புப் போராட்டத்தில் விடுதலை சிறுத்தைகள், புதிய தமிழகம், ஆதித் தமிழர் பேரவை, தமிழ்ப் புலிகள் அமைப்பைச் சார்ந்த தோழர்கள் பங்கேற்கிறார்கள்.

ஓசூரில் ராம் நகரில் நடக்கும் எரிப்புப் போராட்டத்துக்கு முத்துலட்சுமி தலைமை தாங்குகிறார். சேலத்தில் நடக்கும் எரிப்புப் போராட்டத்துக்கு குருத்து-குழந்தைகள் அமைப்பைச் சார்ந்த லட்சுமி பிரியா தலைமை தாங்குகிறார். சேலம் எரிப்புப் போராட்டத்தில் ஆதி தமிழர் பேரவை, அம்பேத்கர் மக்கள் இயக்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், கம்யூனிஸ்ட் மார்க்சிய லெனினிய மக்கள் விடுதலை (தமிழ் நாடு) மண்ணின் மைந்தர்கள், தமிழ் நாடு மக்கள் உரிமைக் கழகம், அருந்ததியர் மக்கள் இயக்கம், ஒடுக்கப்பட்டோர் மக்கள் விடுதலை இயக்கம், மக்கள் ஜனநாயக குடியரசு, தமிழ்நாடு மக்கள் கட்சி ஆகிய அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்கின்றனர்.

மேட்டூரில் பேருந்து நிலையம் அருகே மு. கீதா தலைமையில் எரிப்புப் போராட்டம் நடைபெறுகிறது.

பாளையங்கோட்டை, பெரியார் அம்பேத்கர் சிலை அருகில் எரிப்புப் போராட்டம் நடைபெறுகிறது. ஈரோடு, கோபி, திருப்பூர், பொள்ளாச்சி, கோவை, புதுவை, நாமக்கல், கரூர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் மனு சாஸ்திர எரிப்புக் கிளர்ச்சி நடைபெறுகிறது. கழகத் தோழர்கள் தீவிரப் பணிகளில் களமிறங்கியுள்ளனர்.

டிசம்பர் 23, 24 தேதிகளில் ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழக மாநில மாநாட்டில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து 7 மண்டல மாநாடுகளை கழகம் நடத்தியது. கோபி, சென்னை, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாக பரப்புரை இயக்கங்களை நடத்தி முடித்தப் பிறகு திட்டமிட்டபடி கழகத் தோழர்கள் தோழமை இயக்க ஆதரவோடு மனு சாஸ்திர எரிப்புப் போராட்டத்தை நடத்துகிறார்கள்.

## ஏப்.14 இல் எரிக்கப்பட வேண்டிய 'மனு சாஸ்திர'ப் பிரிவுகள்

*(ஏப்.14 அன்று கீழ்க்கண்ட மனு சாஸ்திரப் பிரிவுகளை அச்சிட்டு தோழர்கள் எரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.)*

### சூத்திரர்கள் அனைவரும் பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள்

சூத்திரன் என்பவன் ஏழு வகைப்படும். 1. யுத்தத்தில் புறங்காட்டி ஓடுபவன் 2. யுத்தத்தில் கைதியாகப் பிடிக்கப்பட்டவன். 3. பிரமணனிடத்தில் பக்தியினால் ஊழியஞ் செய்பவன் 4. விபச்சாரி மகன் 5. விலைக்கு வாங்கப்பட்டவன். 6. ஒருவனால் கொடுக்கப்பட்டவன் 7. தலைமுறை தலைமுறையாக ஊழியஞ் செய்கிறவன்.

– அத்தியாம் 8; ஸ்லோகம் 415

### ஊர் – சேரிப் பிரிவினை

இவர்கள் (தாழ்த்தப்பட்டோர்) அனைவரும் பட்டணத்திற்கும், ஊருக்கும் வெளியில் மரத்தடி, தோப்பு, சுடுகாட்டிற்கு அருகிலுள்ள இடம், மலைப் பூந்தோட்டம் இவைகளில், அனைவருக்கும் இவர்கள் இன்ன தொழிலாளிகள் என்று தெரியும்படி தன் தன் தொழிலைச் செய்துகொண்டு வாழ செய்ய வேண்டியது.

– அத்தியாயம் 10; ஸ்லோகம் 50

சண்டாளனுக்கு ஊருக்கு வெளியில் வீடு இருக்க வேண்டும். அவர்களுக்கு உலோக பாத்திரங்கள் கூடாது. அவர்கள் தீண்டிய பாத்திரங்களைச் சுத்தம் செய்தாலும் பரிசுத்தமாகாது. அவர்கள் நாயும், கழுதையும் வளர்க்கலாம். ஆனால், மாடு முதலியவற்றை வளர்த்து வாழக் கூடாது. – அத்தியாயம் 10; ஸ்லேகாம் 51

### பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சொத்து சேர்க்கக் கூடாது

சூத்திரன் பொருளீட்டத்தக்கவனே ஆயினும் அவன் தனது தேவைக்கு மேலாகப் பொருள் சேர்க்கக் கூடாது. அடிமை போன்ற அவன், பொருள் சேர்த்துப் பணக்காரனாக மாறினால் தற்பெருமைக்குரியவனாவான். தனது அகங்காரத்தால் அல்லது அலட்சியத்தால் பிராமணனுக்கு அவன் துன்பம் இழைப்பான்.

– அத்தியாயம் 10; ஸ்லோகம் 129

### பெண்கள் துரோகிகள்; பெண்களைக் கொல்லுவது பாவமில்லை

படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோக சிந்தை இவற்றினை மாதர் பொருட்டே மனுவானவர் கற்பித்தார். – அத்தியாயம் 9 ; ஸ்லோகம் 17

பெண்களையும், பிராமணர் அல்லாதவரையும் கொல்லுவது பாவமில்லை.– அத்தியாயம் 11; ஸ்லோகம் 65

### விவசாயம் செய்யக் கூடாது

சிலர் பயிரிடுதலை நல்ல தொழிலென்று நினைக்கிறார்கள். அந்தப் பிழைப்பு பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது. ஏனெனில் இரும்பை முகத்திலேயுடைய கலப்பையும், மண்வெட்டியும் பூமியையும், பூமியிலுண்டான பல பல ஜந்துக்களையும் வெட்டுகிறதல்லவா? அத்தியாம் 10; ஸ்லோகம் 84

### பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் படிக்கக் கூடாது

சூத்திரன் மனப்பாடம் பண்ணும் நோக்கத்துடன் வேதம் படிப்பதைக் கேட்டால், அவனது காதுகளில் காய்ச்சிய ஈயத்தையும், அரக்கையும் ஊற்ற வேண்டும். அவன் வேதம் ஓதினால் ஓதும் நாக்கு துண்டிக்கப்பட வேண்டும். வேதத்தில் முழுத் தேர்ச்சி அடைந்தால் அவனது உடம்பு துண்டு துண்டாக வெட்டிச் சிதைக்கப்பட வேண்டும். – அத்தியாயம் 12; ஸ்லோகம் 4

### மனு சாஸ்திரத்தை எரிப்பதற்கு முன் தோழர்கள் எடுக்க வேண்டிய உறுதிமொழி

- நாங்கள் சமுதாயத்தை இழிவுபடுத்தும் நான்கு வர்ண கோட்பாடுகளை எதிர்ப்பவர்கள்.
- அதனடிப்படையில் உருவான ஜாதி–தீண்டாமை–பெண்ணடிமையை மறுப்பவர்கள்.
- இந்த சமுதாய ஒடுக்குமுறையை சமூகத்தின் சட்டமாக்கிய மனுசாஸ்திரமும் – அதன் சிந்தனைகளும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக மனு சாஸ்திரத்தை எரிக்கிறோம்.
- சமூக சமத்துவம் மலரும் வரை இந்த மனு சாஸ்திர சிந்தனைகளை எதிர்த்துப் போராடுவோம் என்று உறுதி ஏற்கிறோம்.
- மடியட்டும் மனு சாஸ்திரம்!
- வெல்லட்டும் மனித சமத்துவம்!

தலையங்கம்

# அறநிலையத் துறையா? அய்யங்கார் துறையா?

திருவரங்கம் கோயிலின் அறநிலையத் துறை கிளை ஆணையர் பெயரில் பிப்.13, 2013 அன்று பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டிருக்கிறது. 7 வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பம் கோரி வெளியிடப்பட்ட விண்ணப்பம் இது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள்:

1. பிரதான ஆலய ஸ்ரீ பாதம் – ரெங்கன் சிலை தூக்குபவர்
2. உப கோயில் ஸ்ரீபாதம் – சுற்றுப் பிரகார சிலை தூக்குபவர்
3. சன்னதி வாசல் – சுற்றுப் பிரகார சிலைகளின் அர்ச்சகர்
4. உப கோயில் பரிசாரகர் – சிலைகளுக்கு சமைத்துப் போடுபவர்

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கல்வித் தகுதி என்ற தலைப்பில் ‘இந்து பிராமணர் அய்யங்கார்’ என்று அந்த விளம்பரம் கூறுகிறது. ‘இந்து பிராமண அய்யங்கார்’ என்பது கல்வித் தகுதியா? அதற்கு எந்த கல்லூரி வகுப்புகளை நடத்துகிறது என்பது தெரியவில்லை. அறநிலையத் துறையின் இந்த ‘மனு சாஸ்திர’ விளம்பரத்தை எதிர்த்து அனைத்து சாதியினருக்கான அர்ச்சகர் பயிற்சி முடித்துவிட்டு, வேலை வாய்ப்பின்றி தவிக்கும் மாணவர் சங்கத்தின் தலைவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அய்யங்கார் பார்ப்பனர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்ற இந்த விளம்பரம் அரசியல் சட்டத்தின் 14, 16, 17, 21வது பிரிவுகளுக்கு எதிரானது. தீண்டாமையை நியாயப்படுத்துவதோடு, இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கும் எதிரானது என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி அரி. பரந்தாமன், இடைக்கால தடைவிதித்து, அறநிலையத் துறைக்கு விளக்கம் கேட்டு தாக்கீது அனுப்பியுள்ளார். தமிழ்நாடு மனித உரிமை பாதுகாப்பு மய்யம் இந்த வழக்கை நடத்துகிறது.

அரங்கன் சிலையை தூக்குவதற்கு ‘அய்யங்கார்கள்’ தான் வேண்டுமா? மற்றவர்கள் தூக்கினால் அரங்கன் எழுந்து, ஓட்டம் பிடித்து விடுவானா? இதிலே, ‘சிலைகளுக்கு சமைத்துப் போடுபவர்’ என்று, ஒரு வேலை குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமைத்துப் போடுகிற உணவை, இந்த சிலைகள் சாப்பிடுகின்றதா? சாப்பிடாத சிலைகளுக்கு சமைத்துப் போடுவதற்குக்கூட ‘அய்யங்கார்’தான் வேண்டுமா? சிலைகளுக்கு சமையலுக்கு ஒரு அய்யங்கார் வேண்டும் என்றால், சிலைகள் சாப்பிட்டு சீரணித்து மலம், சிறுநீர் கழிப்பதை சுத்தம் செய்வதற்கும், “அய்யங்கார்கள்” வேண்டுமே! ஏன் அந்த வேலைக்கு விண்ணப்பங்களைக் கோரவில்லை?

2013 ஆம் ஆண்டிலேயே காதில் முழம் முழமாக பூ சுற்றும் இத்தகைய விளம்பரங்களை அறநிலையத் துறையே வெளியிடுகிறது என்றால், கடந்த காலங் களில் இந்தப் பார்ப்பனர் கூட்டம் எவ்வளவு ‘தில்லு முல்லு’களை செய்திருக்கும் என்பதை கற்பனை செய்து பார்த்துக் கொள்ளலாமே!

ஆண்டவன் சிலையை தொடுவதற்கு பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. மற்றவர்கள் தொட்டு விடக் கூடாது. ‘விக்ரகம்’ தீட்டுப்பட்டுவிடும் என்ற ‘தீண்டாமை’யின் வெளிப்பாடு தானே இந்த விளம்பரம்?

சமூகத்தில் தீண்டாமையை குற்றம் என்று கூறுவதற்கு சட்டம் இருக்கிறது. ஆனால், மதத்தின் ‘தீண்டாமை’யை ‘பழக்க வழக்கம்’ என்ற பெயரில் சட்டம் ஏற்றுக் கொள்கிறது.

மதத்தின் தீண்டாமை புனிதமாக – சட்டமாக போற்றப்படும் வரை சமூகத்தின் தீண்டாமை நீடித்துக் கொண்டே இருக்கும் என்பது பார்ப்பனர்களுக்கு நன்றாகவே தெரியும். இந்த அடிப்படையான உண்மையை தெளிவாகப் புரிந்து கொண்டதால்தான் பெரியார் மதத்தின் தீண்டாமைக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தினார். அதுதான் அனைத்து சாதியினருக்குமான அர்ச்சகர் ஆகும் உரிமைக்கான போராட்டம்.

அந்த சட்டங்கள் அமுலுக்கு வந்துவிடக் கூடாது என்று பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் வரை போய் தடுக்கப் பார்க்கிறார்கள்.

மதத்தின் தீண்டாமை தகர்க்கப்படும்போதுதான், பார்ப்பனியத்தின் ஆதிக்கம் மய்யம் கொண்டுள்ள அதன் உயிர்நாடி ஆட்டம் காணும்.

திருவரங்கம் கோயில் பணிகளுக்கான விளம்பரங்கள் – இந்த உண்மையையே உறுதிப்படுத்துகிறது.

# ‘மனு சாஸ்திரத்தை’ அங்கீகரிக்கும் இந்து சட்டம்

**மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சியின் அமைப்புச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து, ‘சிந்தனையாளன்’ மார்ச் இதழில் எழுதியுள்ள ஆசிரியர் உரையிலிருந்து சில பகுதிகளை நன்றியுடன் வெளியிடுகிறோம்.**

உலகத்தில் மிகப் பெரிய எண்ணிக்கையினரைக் கொண்ட மதங்கள் மூன்று. 1) கிறித்துவம் 2) பௌத்தம் 3) இஸ்லாம். நான்காவது பெரிய மதம் “இந்து மதம்” என்கிற “பிராமண மதம்”; பிராமணிய - பார்ப்பனிய மதம்.

பார்ப்பனியம் ஏணிப் படிக்கட்டு முறையிலான - வானை முட்டும் கோபுரத்தின் பல மாடங்களைக் கொண்ட இடம் பெயராத - இடத்தை மாற்றிக் கொள்ள முடியாத (Immobile) மதம். ஏணியை நாம் தான் அமைக்கிறோம்; அதில் மேலே உள்ள படி கீழே வராது; கீழே உள்ள படி மேலே ஏறாது.

இந்து மத ஸ்மிருதிகள், சுருதிகளின்படி அமைந்ததே இந்த நால்வருண சாதி அமைப்பு. பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற நான்கு பிரிவுகள் பிறப்பினால் மட்டுமே உண்டு. பிராமணன் தவிர்த்த மற்ற எந்த வருணத்தாலும் - பக்தி, ஒழுக்கம், அறிவுத் திறன் என்கிற எந்தத் தகுதியைக் கொண்டும் தன்னை “பிராமணன்” ஆக உயர்த்திக் கொள்ள முடியாது. “பிறப்பினால் மட்டுமே பிராமணன்; வேறு எந்த முறையிலும் எப்போதும் வேறு வருணத்தான் பிராமணன் ஆக முடியாது” (A Brahmin is born and never made) என்பதே இந்துச் சட்டத்திலுள்ள விளக்கம்.

தென்னிந்திய இந்துக்களுக்கு உயரிய அதிகாரம் படைத்த ஸ்மிருதி நூல்கள் பராசர ஸ்மிருதி, யக்ஞவல்க்கிய ஸ்மிருதி, மனுஸ்மிருதி இவை மட்டுமே.

இவற்றின்படி, தென்னிந்தியாவில், கலியுகத்தில், பிராமணன், சூத்திரன் என்கிற இரண்டு வருணங்கள் மட்டுமே உண்டு.

இந்தியா முழுவதிலும் இன்றும் நான்கு வருணங்கள் உண்டு. இந்த நான்கு வருணங்களுக்கு வெளியே - தனியே (Out -Caste) உள்ளவர்கள் “தீண்டப்படாதவர்கள்” என்போர். இவர்களிடையேயும், நான்கு வருணங்களைச் சேர்ந்தவர்களிடையேயும் சேர்த்து 6,700க்கு மேற்பட்ட உள்சாதிகள் உள்ளன.

இந்த உள்சாதிகளும் ஏணிப் படிக்கட்டு முறையிலேயே உள்ளவை.

**மேலே கண்ட எந்த விளக்கமும் – எந்த வருணப் பெயரும் – நம்மை ஆளுகிற இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இல்லை. ஆனால் இந்துச் சட்டத்தில் மட்டும் உண்டு.**

இந்த ஏற்பாட்டினால் இந்தியாவிலுள்ள பழங்காலந்தொட்டு இங்கேயே வாழ்ந்து வருகிறவர்களும், நாட்டின் செல்வத்தை உருவாக்குகிறவர்களுமான உழைப்பாளி மக்கள் - இந்துக்களில் 85 சதவீத மக்கள் இழிசாதி மக்களாகவே 2013 இலும் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முழுப் பாதுகாப்புத் தருபவை 1) இந்திய அரசமைப்புச் சட்ட விதிகள் 13, 19, 25, 29, 372(3) முதலானவை; (2) இந்திய உச்சநீதி, உயர்நீதி மன்றங்கள், (3) இந்திய அரசு நிர்வாக அமைப்பு இவையே ஆகும்.

............................

**கீழே உள்ளதைப் படியுங்கள்:**

விதி 17 : தீண்டாமை ஒழிப்பு : “தீண்டாமை” ஒழிக்கப்பட்டுள்ளது; அதை எந்த வடிவத்தில் அனுசரிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது. “தீண்டாமையால்” நடைமுறைப்படுத்தப்படும் எத்தகைய செயலும் சட்டப்படி தண்டனைக்கு உரிய குற்றமாகும்.

இந்த விதியில் இரண்டு இடங்களில் “தீண்டாமை” என்ற சொல் உள்ளது. அது மேற்கோள் குறிக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளது. அது ஏன் அப்படி?

“எல்லா இடங்களிலும் தீண்டாமை ஒழிக்கப்பட மாட்டாது” என்பதைக் குறிக்கவே அது அப்படி உள்ளது.

**சிலர் நம்புவதுபோல், விதி 17 இல் உள்ள “தீண்டாமை” என்கிற சொல்லை நீக்கிவிட்டு, “சாதி” என்கிற சொல்லைப் போட்டு விட்டால், அதனால் – பிறவியாலான “வருணசாதி” ஒழியாது.**

**காட்டாக, இந்து கோவில் கருவறைக்குள் தீண்டாமை இருக்கும் – அங்கே ஒழிக்கப்பட மாட்டாது என்பது இதன் பொருள். அது மட்டுமா?**

**காஞ்சி சங்கராச்சாரி மடத்துக்குப் பார்ப்பான் மட்டுமே மடாதிபதியாக வர முடியும்; காஞ்சி தொண்டை மண்டல முதலியார் மடத்துக்கு அந்தச் சாதிக்காரர் மட்டுமே வர முடியும்; மதுரை, குன்றக்குடி மடங்களுக்குக் கார்காத்த வேளாளர் மட்டுமே வர முடியும். அரசமைப்புச் சட்டம் இதற்கு உரிமை அளித்துள்ளது.**

அடுத்து பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற பிறவி வருண சாதி உயர்வு, தாழ்வை - **வழக்கம், பழக்கம் என்கிற பேரால்**, அரசமைப்புச் சட்ட விதிகள் 13, 19, 25, 26, 372 (3) இன்றும் காப்பாற்றுகின்றன.

1957 இல், இவ்விதிகளைத் தமிழில் அச்சிட்டுத்தான், 10,000 பெரியார் தொண்டர்கள் எரித்தார்கள்.

மேலே கண்ட நான்கு வருணங்களின் பெயர்கள் அரசமைப்புச் சட்டத்தில் எழுதப்படாமலேயே அந்த ஏற்பாடு காப்பாற்றப்படுகிறது. இது பார்ப்பன-பார்ப்பனிய மேல் வருணத்தாரின் அடாவடியால் நடந்தது. அரசமைப்பிலுள்ள இதை மாற்ற வேண்டும் என்று, 1957 முதல் கடந்த 55 ஆண்டுகளில் எந்தக் கட்சியும் முயலவில்லை.

அரசமைப்புச் சட்டத்தின் கடைசி விதியை 395, இது பழக்க வழக்கச் சட்டத்தைப் பாதுகாக்கிறது.

அதற்கான விதியை அம்பேத்கர் எப்படி வடிவமைத்தார்?

“இந்த அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த பிறகு, அது வரையில் ஏற்கனவே பழக்கம், வழக்கம் என்கிற பேரால் நடப்பில் இருந்த எல்லாச் சட்டங்களும் செல்லுபடியாக மாட்டா” என்றே எழுதி, அரசமைப்புச் சட்ட அவையிலேயே, “இந்துச் சட்டத் திருத்த மசோதா” (Hindu Code Bill) என்கிற வடிவில் முன்மொழிந்தார்.

1951 இல் அதை மீண்டும் வலியுறுத்தினார். இராஜேந்திர பிரசாத்தும், நேருவும் அவருடைய கோரிக்கையை வன்மையாக எதிர்த்தனர். உடனே அம்பேத்கர் 1951 இல் பதவி விலகிட இதுவும் ஒரு காரணம்.

## புனலாய்ப் பொங்கி எழுவீரே

அறிவும் இல்லா மனிதர்களும்
எவனோ படைத்த மனுநீதி
செறிவாய் உயர்த்தும் எனக்கூறி
சிறப்பாய் அதனைச் செயல்படுத்தி
மனிதம் என்பதைக் கொன்றுவிட்டார்
மறுபடி மறுப்பு தொடருகின்றார்
இனிமேல் அதனைத் தொடர்ந்தாலே
இருக்கும் மனிதமும் தொலைந்துவிடும்.

நுணலாய்க் கத்தி வளர்ப்போரை
நெட்டித் தள்ளி ஒதுக்கிடுவோம்
மணலாய்க் கயிறு திரிக்கின்ற
மனுவின் நீதி என்பதனை
அனலில் பொசுக்கி எரிப்பதற்கே
அறிவு தெளிந்த நல்லோரே
புனலாய்ப் பொங்கி எழுவீரே
பொதுமைத் தமிழும் படைப்பதற்கே!

– பாவலர் ம.பொ. கணேசன்

# திருச்சியில் சிறப்புடன் நடந்த ஜாதி-தீண்டாமை ஒழிப்பு மாநாடு







'தமிழர் ஒற்றுமைக்கான ஜாதி-தீண்டாமை' ஒழிப்பு மாநாடு, திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகே எழுச்சியுடன் நடைபெற்றது. இது சென்னை, சேலம், திண்டுக்கல், திருவாரூர், நெல்லை, கோவையைத் தொடர்ந்து கழக சார்பில் நடைபெறும் 7வது மண்டல மாநாடாகும். மேட்டூர் கருப்பரசன் குழுவினரின் வீதி நாடகம், மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு மாநாடு தொடங்கியது. திருச்சி மண்டல அமைப்புச் செயலாளர் த. புதியவன் வரவேற்புரையாற்றினார். பெரம்பலூர் மாவட்ட அமைப்பாளர் துரை. தாமோதரன், முனைவர் ஜீவா, கழக பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து, கழகப் பொருளாளர் ப.இரத்தினசாமி தொடங்கி வைத்து உரையாற்றினார். கரூர் வழக்கறிஞர் ஆர்த்தி, ஆதித் தமிழர் பேரவை நிதிச் செயலாளர் பழ. நீலவேந்தன், த.மு.மு.க. மாநிலச் செயலாளர் பேராசிரியர் ஹாஜா கனி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கரூர் பகுதியிலிருந்து கழகப் பொறுப்பாளர் காமராசர் தலைமையில் தனி வாகனத்தில் தோழர்கள் மாநாட்டில் பங்கேற்றனர். திருச்சி மாவட்ட கழக அமைப்பாளர் குணராஜ் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். ஜெயின்பேட்டை




தோழர் அ.பொன்னுசாமி நன்றி கூற நிகழ்ச்சி 10.15 மணியளவில் நிறைவடைந்தது.

# ஜாதிய சந்தர்ப்பவாதிகளின் இரட்டை முகம்

டாக்டர் ராமதாசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் சார்பில் இருவரும் மிகவும் நெருக்கமாக இருந்தபோது இரண்டு விருதுகள் கொடுக்கப்பட்டன. ஒன்று 'தமிழ்க் குடிதாங்கி' விருது. மற்றொன்று 'அம்பேத்கர் சுடர்' விருது.

'குடி தாங்கி' என்ற கிராமத்தில் இறந்து போன தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவரின் சடலத்தை ராமதாஸ் சார்ந்த வன்னியர் ஜாதித் தெரு வழியாக எடுத்துச் செல்லக்கூடாது என்று அந்த மக்கள் தடுத்தனர். ராமதாஸ் முன்னின்று இறந்துபட்ட அந்த தாழ்த்தப்பட்ட தோழரின் பாடையின் ஒரு முனையைப் பிடித்துத் தூக்கிச் சென்றதால் அவருக்கு 'தமிழ் குடிதாங்கி' என்ற விருது கொடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஆனால், வன்னிய மக்களின் கொந்தளிப்பை அடக்க ராமதாஸ் எந்த ஒரு சிறு முயற்சியையும் எடுக்க வில்லை என்றும், அரசியல் கட்சி ஒன்றில் இருக்கின்ற பெரியார் கொள்கைப் பற்றாளர் ஒருவர்தான் அத்தகைய அமைதி முயற்சியில் ஈடுபட்டு வன்னிய மக்களை சமநிலைக்குக் கொண்டு வந்தார் என்றும், அறுவடையை மட்டும் ராமதாஸ் அனுபவித்தார் என்றும் அந்த நிகழ்வில் முன் நின்ற நமக்கு நெருக்கமானவர்கள் செய்தி களை கூறினார்கள்) எது எப்படியோ இருக்கட்டும். விடுதலைச் சிறுத்தைகளால் முன் நிறுத்தப்பட்ட ராமதாசுக்கு அவ்விருது அளிக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு தற்போது 18 விழுக்காடு இடஒதுக்கீடுக்கான வாய்ப்பு தமிழ்நாடு அரசின் கல்வி, வேலை வாய்ப்புகளில் கிடைக்கிறது. இது தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் ஏற்பாடு செய்த ஒரு நிகழ்வில் ராமதாஸ் பேசும்போது, 'தற்போது தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் 21 விழுக்காடு இருக்கிறார்கள். அதனால், அவர் களுக்கான இடஒதுக்கீட்டை தற்போது இருக்கும் 18 விழுக்காட்டிலிருந்து 21 விழுக்காடாக உயர்த்தப் பட வேண்டும்' என்று குறிப்பிட்டார். இதற்காக விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் ராமதாசுக்கு 'அம்பேத்கர் சுடர்' விருது அளிக்கப்பட்டது.

விடுதலைச் சிறுத்தைகள் பார்வையில் மேற் சொன்ன இரண்டு செய்திகளுக்காக இரு விருதுகள் ராமதாசுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த நேரத்தில், ராமதாசை நினைக்கும்போது யூதாசைப் பற்றிய நினைவு நமக்கு வருகிறது.

கிறித்துவ மதக் கடவுளான இயேசுவை குழந்தைப் பருவத்தில் அவரின் தாய் என்று சொல்லப்படுகிற மேரியின் கையில் இருப்பது போன்ற படம் / சிலை நமக்கு நினைவிற்கு வரும். அதை குழந்தை ஏசு (Infant Jesus) என்றழைப்பர். இந்தப் பெயரில் நிறைய கிறித்துவ ஆலயங்கள் உள்ளன. அந்தக் குழந்தை ஏசுவை வரைய ஓவியர் ஒருவருக்கு பணி ஒன்று கொடுக்கப்பட்டது.

அந்த ஓவியர் உலகமெங்கும் சுற்றி, பார்ப்பதற்கு மிகவும் அமைதியான சாந்தமான ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுத்து, அக்குழந்தையை மாதிரியாகக் கொண்டு (மாடல்) ஒரு படம் வரைந்து கொடுத்தார். அதுவே இன்று உலகம் முழுக்க பலரும் காணும் குழந்தை ஏசு படமும் / சிலையும் ஆகும். அதே ஓவியருக்கு மீண்டும் ஒரு பணி, மிகச் சரியாக 21 ஆண்டுகள் கழித்து கொடுக்கப்பட்டது. அது யாருடைய ஓவியம் என்றால், இயேசுவை 30 வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுத்த யூதாசின் ஓவியம்தான்.

யூதாசின் மாதிரிக்கான தேடலுக்காக மீண்டும் அந்த ஓவியர் உலகம் முழுக்க சுற்றித் திரிந்தார். கிறித்துவர்களின் கடவுளாக மதிக்கப்படுகிற இயேசுவை காட்டிக் கொடுத்தவனுக்கான தீய குணங்களான துரோகம், வஞ்சகம், கயமைத்தனம், அயோக்கியத் தனம் - இன்னும் என்னவெல்லாம் எதிர்மறை குணங்களாக உள்ளதோ அவற்றை யெல்லாம் மொத்தமாக உடைய ஒருவனை மிக நீண்ட தேடலுக்குப் பிறகு கண்டறிந்தார் அந்த ஓவியர். அவனை மாதிரியாக நிற்க வைத்து அவர் வரைந்த ஓவியமே இன்றும் நம் அனைவருக்கும் இயேசுவை காட்டிக் கொடுத்த யூதாசின் ஓவியம் ஆகும்., யூதாஸ் சிலையாக வடிவமைக்கப்பட வில்லை. கடைசி இரவுச் சாப்பாடு என்ற ஓவியத்தில் மட்டுமே இருப்பான். இதில் மிகவும் சிறப்பான செய்தி என்னவெனில், 21 ஆண்டுகளுக்கு முன் யாரை குழந்தை ஏசுவின் மாதிரியாக, சிறு குழந்தையாக இருந்தபோது அந்த ஓவியர் வரைந்தாரோ, அதே குழந்தைதான் 21 ஆண்டு களுக்குப் பின் யூதாசின் படம் வரைய மாதிரியாக நின்றவன் என்பதுதான்.

இதைத் தர்க்கரீதியாகச் சொல்ல முற்படுவோ மானால், 'தமிழ் குடிதாங்கி', 'அம்பேத்கர் சுடர்' விருதுகள், விடுதலைச் சிறுத்தைகளால் அளிக்கப் பட்டு மிகவும் அமைதியாக, சாந்தமாக அறிமுகப் படுத்தப்பட்ட ராமதாஸ் (குழந்தை ஏசுவைபோல்), இன்று ஒட்டு மொத்த தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக் கேடயமாக இருக்கின்ற, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் (1989) திருத்தம் வேண்டும் என்றும், 'ஜாதி ஒழிந்த சமுதாயம்' படைக்க ஆர்வப்படும் முற்போக்காளர்களின் சிந்தனைக்கு எதிராக, தாழ்த்தப்பட்ட இளைஞர்கள், இடை நிலை ஜாதிகளைச் சார்ந்த இளம் பெண்களை (இயல்பாக காதல் வயப்பட்டு) காதலித்து திருமணம் செய்வதை 'காதல் நாடகத்' திரு மணங்கள் என்று கூறுவதன் மூலம், தனது சாந்தமான குழந்தை ஏசு முகமூடி கிழிந்து, தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளை அனுபவித்து பதவிகள் பெற்று, அவர்களையே காட்டிக் கொடுக்கும் யூதாசின் முகத்திற்கு மிகவும் பொருத்தமானவராக இருக்கிறார். குழந்தை ஏசு, யூதாஸ் மாதிரிகளை உலகம் முழுக்க தேடித் திரிந்தார் அந்த ஓவியர். ஆனால், அவை இரண்டும் ஒரே இடத்தில் (பல வருடங்கள், பல்லாயிரம் கிலோ மீட்டர்கள் அலையாமல்) ராமதாஸ் வடிவில் இங்கேயே கிடைக்கிறது என்பதே நாம் உலகுக்கு அறிவிக்கும் செய்தியாகும்.

திருத்தப்படக் கூடாது தீண்டாமை வன் கொடுமைச் சட்டம்!

மலரட்டும் ஜாதி மறுப்பு காதல் திருமணங்கள்! மடியட்டும் ஜாதிகள்!

**– ஜஸ்டின் ராஜ்**

DATE OF PUBLICATION 10.04.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மனித சமத்துவத்துக்கான போராட்டம்

மனு சாஸ்திர நூலை - காகிதத்தை எரிப்பது மட்டுமல்ல இந்தப் போராட்டம்; நமது மக்கள் சிந்தனையில் காலம் காலமாய் திணிக்கப்பட்ட ஜாதி - தீண்டாமை - பெண்ணடிமை சிந்தனைகளை எரிப்பதற்கே இந்தப் போராட்டம்! நாம் வாழும் ஜாதி சமூகக் கட்டமைப்பில் மாற்றங்கள் வர வேண்டும்; ஜாதி - தீண்டாமை - பார்ப்பனியம் சிந்தனைகள் மடிந்து வீழ வேண்டும் என்பதற்கே இந்தப் போராட்டம்!

இது மனித சமத்துவத்தை வலியுறுத்தும் போராட்டம்! சமூக மாற்றத்தை முன்னெடுக்கும் போராட்டம்! இளம் தலைமுறையின் சிந்தனை மாற்றத்திற்கான போராட்டம்! இது ஓர் இயக்கத்தின் குரல் அல்ல மானுட விடுதலைக்கான முழக்கம்! பங்களிப்பை வழங்கிடுங்கள்! ஆதரவுக் கரம் நீட்டுங்கள்! இதன் நியாயங்களை பரப்புங்கள்!

**அது என்ன மனு சாஸ்திரம்?**

- 2000 ஆண்டுகளுக்கு முன்பு புஷ்யமித்திர சுங்கன் என்ற பார்ப்பன ஆட்சியில் சட்டமாக்கப்பட்டது மனு சாஸ்திரம்.
- 1837 ஆம் ஆண்டு வரை இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் ஆட்சியில் - நீதிமன்றத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது இந்த மனு சாஸ்திரம்.
- இப்போது அரசியல் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது; ஆனால் சட்டத்தையே மதிக்காமல் - சமூகத்தை ஆட்டி வைப்பதும் வழி நடத்துவதும் இதே மனு சாஸ்திரம் தான்.
- ஊராகவும் சேரியாகவும் பிரித்து வைத்திருப்பது மனு சாஸ்திரம்.
- இரட்டைக் குவளை, இரட்டைச் சுடுகாடுகள், உத்தமபுரச் சுவர்கள் தோன்றக் காரணம் மனு சாஸ்திரம்.
- பணிக்கு செல்லும் பெண்களை கேவலமாகப் பார்க்கும் பார்வைக்குக் காரணம் மனு சாஸ்திரம்.
- திருமணத்துக்கு, வீடு திறப்புக்கு, வீட்டில் நடக்கும் சடங்குகளுக்கு, சாவுகளுக்கும்கூட பார்ப்பனர்களை நாம் அழைக்கச் செய்தது மனு சாஸ்திரம்.
- கோயில்களிலும் யாகங்களிலும் கும்பாபிஷேகங்களிலும் வைதீகச் சடங்குகளை நடத்துவதைப் பார்ப்பனர்களின் உரிமையாக்கியது மனு சாஸ்திரம்.
- உரிய பயிற்சி பெற்ற அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற தமிழக அரசின் சட்டங்களை பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றத்தின் மூலம் முடக்கியதற்குக் காரணம் மனு சாஸ்திரம்.
- நம் மீது திணிக்கப்பட்டுள்ள ஜாதிக்கும், தீண்டாமைகளுக்கும் மூல காரணம் மனு சாஸ்திரம்.
- பெண் சிசுக் கொலைக்கும், சிறு வயதுத் திருமணங்களுக்கும் காரணம் மனு சாஸ்திரம்.
- பெரியார், அம்பேத்கர் உழைப்புக்கு முன் பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் கல்வி கற்கக்கூட முடியாமல் போனதற்கும், உயர் பதவிகளுக்கும் போக முடியாததற்கும் காரணம் மனு சாஸ்திரம்.
- எனவேதான், 1927-லேயே பெரியார் இயக்கத்தாலும், அம்பேத்கராலும் எரிக்கப்பட்டது மனு சாஸ்திரம்.
- விவேகானந்தர், பார்ப்பன பாரதி, தமிழறிஞர்கள், மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் உள்பட அனைவராலுமே எதிர்க்கப்பட்டது இந்த மனு சாஸ்திரம்.

எனவேதான் இந்த மனு சாஸ்திரம் எரிக்கப்பட வேண்டும்.

# சுவீடன் விமான நிறுவனத்தின் இடைத் தரகராக செயல்பட்ட ராஜீவ் காந்தி

ராஜீவ் காந்தி பிரதமராக வருவதற்கு முன்பு விமான 'பைலட்' ஆக பணி புரிந்தார். அப்போது சுவீடன் நாட்டின் 'சாப்-ஸ்கேனியா' என்ற விமானக் கம்பெனிக்கு இடைத் தரகராக செயல்பட்டார். 1970 ஆம் ஆண்டு இந்த நிறுவனம் 'விக்கென் பைட்டர்' என்ற போர் விமானத்தை இந்தியாவுக்கு விற்க முனைந்தபோது அதற்கு ராஜீவ் காந்தி, தனது குடும்ப செல்வாக்கைப் பயன் படுத்தியுள்ளார். இந்த தகவலை உலகம் முழுதும், அதிர்ச்சியலைகளை உருவாக்கி வரும் 'விக்கி லீக்ஸ்' இணையதளம் அம்பலப்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கு விமானங்களை வாங்குவதில் முதன்மையான இடைத்தரகராக ராஜீவ் காந்தி செயல்பட்டதற்கான ஆதாரங்களை அமெரிக்க தூதரக வட்டாரங்கள் அறிந்து, கிஸ்ஸிங்கர் வலை தளத்தில் பதிவு செய்து வைத்துள்ளன. இதை இப்போது 'விக்கி லீக்ஸ்' அம்பலப்படுத்தியுள்ளது. 'இந்து' நாளேடு (ஏப்.8) இதை முதல் பக்க செய்தியாக வெளியிட்டுள்ளது.

பதவிக்கு வந்த பிறகு இதே ராஜீவ் காந்தி, சுவீடன் நாட்டிலிருந்து போபோஸ் பீரங்கி வாங்கியதில் 'கமிஷன்' பெற்றது நாட்டையே உலுக்கியது, அதன் காரணமாக நாடாளுமன்ற தேர்தலில் அவரது கட்சி தோல்வியை சந்தித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

# எரித்திட வேண்டும்!

## இளம் பிறை

விளைநிலத்தில் நச்சுச்செடி நட்டுவைத்தவன்-தன்
விருப்பங்களை நீதியென பொய்யுரைத்தவன்
நாலுவர்ணம் என்று நம்மை கூறுபோட்டவன்-அதை
நம்பவைத்து வேற்றுமையை வென்றெடுத்தவன்

சாதியென்னும் அணுஉலைக்கு அடிக்கல்நாட்டவன்-அந்த
சாக்கடைக்குள் மானுடத்தை மூழ்கடித்தவன்
பொய்க்கதைகள் விரித்துவைத்து சந்தை போட்டவன்-அதில்
போதுமான அளவுக்குமேல் லாபம் பார்த்தவன்

பெருமையென்று சிறுமைகளை ஊக்குவித்தவன்-அவன்
பெண்ணினத்தின் நன்மதிப்பை கொன்று போட்டவன்
இனம் அழிக்கும் பகைவர்களை வளர்த்துவிட்டவன்-மண்ணில்
இருந்து வந்த சமத்துவத்தை குலைத்துவிட்டவன்.

அதர்மம் தன்னை தர்மமென்று சட்டமிட்டவன்-தர்மம்
அழிவதற்கு முதன் முதன்முதலாய் திட்டமிட்டவன்
உணவுதரும் உழவர்இனம் இழிந்தது என்றான்-அவன்
உண்மைகளை குழியிலிட்டு அதன்மேல் நின்றான்

உயர்வுதாழ்வு என்பதனை ஒழித்திட வேண்டும்-நாம்
உயர்வதற்கு பெரியாரின் வழிசெல்ல வேண்டும்
மாநிலமே பகுத்தறிவில் திளைத்திட வேண்டும்-அதற்கு
மனுவினை நாம் உடனடியாய் எரித்திட வேண்டும்.

# மனுவின் வாரிசு நரேந்திர மோடி

குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடி எழுதிய 'கர்ம யோக்' என்ற நூலை, அந்த மாநில தகவல் தொடர்புத் துறை வெளியிட்டுள்ளது. அந்த நூலில் மோடி எழுதியுள்ளதாவது:

"சில வேளைகளில் மலம் அள்ளும் பணியில் ஈடுபட்டுள்ள வால்மீகியின் ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு ஆன்மிக அனுபவம் கிடைக்கலாம். இந்தப் பணி சமூகத்தின் மகிழ்ச்சிக்காகவும் கடவுள்களின் சந்தோஷத்திற்காகவும் செய்யப்படுவதாகும்."

ஜாதியின் பெயரால் குலத்தின் பெயரால் இழிவான தொழிலை அருந்ததிய மக்கள் தொடர்ந்து செய்ய வேண்டுமென்பதுதான் மோடியின் உபதேசம். மலம் அள்ளுவது ஆன்மிக அனுபவம் என்றால், அதை இவரும் இவரது கட்சிக் காரர்களும் ஏன் பிறருக்கு விட்டுத்தர வேண்டும்? அந்த ஆன்மிக அனுபவத்தை அவர்களே பெறலாமே? ஜாதியின் அடிப்படையில்தான் தொழில்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன என்ற மனுவின் குரலைத் தான் மோடி எதிரொலிக்கிறார்.

இந்தியா முழுவதும் மலத்தை அள்ளி தலையில் சுமந்து அகற்றும் பணியில் ஆறு லட்சத்து ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பாதாள சாக்கடைகளை சுத்தம் செய்யும் போது விஷ வாயு தாக்கி 22 ஆயிரத்து 327 பேர் மரணமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் அருந்ததிய மக்களாகவே இருக்கிறார்கள்.

நாடு சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகள் ஆன பின்பும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி வியத்தகு சாதனைகளைப் படைத்து வரும் நிலையிலும் இந்த இழிநிலையைப் போக்க வேண்டாமா?

"மலம் அள்ளும் துப்புரவு
தொழிலாளிக்கு
எந்தக் கை
பீச்சாங்கை"

- என்று நெற்றிப் பொட்டில் அறைந்ததுபோல கேட்கிறது ஒரு புதுக் கவிதை. ஆனால், மோடியோ இது ஒரு ஆன்மிக அனுபவம் என்கிறார்.

**– கே. வரதராஜன் எழுதிய**
**'சாதி–மதம்–வர்க்கம்!' நூலிலிருந்து**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP
Posted on: 11th April 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஏப்ரல் 18, 2013 | புரட்சி 12 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00

## 18 மய்யங்கள்: பெண்கள் தலைமை: களமிறங்கியது கழகம்

# தடைமீறி, மனு சாஸ்திரத்துக்கு தீ




**பொள்ளாச்சியில் மனு சாஸ்திர எரிப்பு**

*ஜாதி-தீண்டாமை-பெண்ணடிமைக்கு கருத்தியலை வழங்கும் மனுவின் சிந்தனைகளை ஒழிக்கப் போராடுவோம் என்று உறுதிமொழி ஏற்று 18 மய்யங்களில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் தடையை மீறி மனு சாஸ்திரத்துக்கு தீயிட்டனர். பெண்கள் போராட்டத்துக்குத் தலைமை ஏற்க திட்டமிட்ட அனைத்து மய்யங்களிலும் தோழமை அமைப்புகளின் ஆதரவோடு போராட்டம் நடந்தது. மாலையில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.*

*போராட்டம் குறித்த செய்தித் தொகுப்பு:*

### தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தூத்துக்குடி பாளை ரோட்டிலுள்ள தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் சிலையருகே காலை 10 மணியளவில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு கழக மாநில பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, நெல்லை மாவட்ட அமைப்பாளர் சி.ஆ.காசிராசன், குமரி மாவட்டத் தலைவர் ஜா. சூசையப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆதித் தமிழர் பேரவையின் மாநில துணைப் பொதுச் செயலாளர் க.கண்ணன் போராட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழக நெல்லை மண்டலச் செயலாளர் சோ.அ.குமார் போராட்டம் நடத்துவதின் நோக்கம் குறித்து உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து தோழர்கள் மனு சாஸ்திரத்தை தீயிட்டுக் கொளுத்தினர். இப் போராட்டத்தில் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் க.மதன், மாவட்ட பொருளாளர் ரவிசங்கர், மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, தூத்துக்குடி மாநகரச் செயலாளர் பால். அறிவழகன், திருவைகுண்டம் ஒன்றிய செயலாளர் சந்தனராஜ், குமரி மாவட்ட அமைப்பாளர் அ.சேவியர், தூத்துக்குடி மாநகரத் தலைவர் சா.த.பிரபாகரன், தூத்துக்குடி மாவட்ட துணைச் செயலாளர் ச.கா. பாலசுப்பிரமணியன், ஆழ்வை ஒன்றிய தலைவர் நாத்திகம் முருகேசன், ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா.உதயக்குமார், அமிர்தராசு, செல்லத்துரை, சந்திரசேகர், குமரி மாவட்ட நீதியரசர், பந்தல் முருகன், கீழப்பாவூர் சூசையப்பா மற்றும் ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் சண்முகவேல், துணைத் தலைவர் அருந்ததியரசு, மாநில துணைப் பொதுச் செயலாளர் சு.க. சங்கர், நெல்லை மாவட்டச் செயலாளர் கலைக் கண்ணன், மாவட்டத் தலைவர் சுந்தராசு, நெல்லை மாநகரத் தலைவர் தாஸ், ராஜேஷ், ஜான், மாநகர கொள்கைப் பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் திலீபன், பாளை ஒன்றிய செயலாளர் முத்துவீரன் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகம், ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள் உள்பட 100 பேர் கலந்து கொண்டனர். 60 பேர் கைதானார்கள்.

### கோபி

ஈரோடு வடக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் ஏப்.14 காலை 10.30 மணியளவில் கோபி பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றது. போராட்டத்திற்கு தோழியர் கிருஷ்ணவேணி தலைமையேற்க, தோழியர் மணிமொழி முன்னிலை வகிக்க, மண்டல செயலாளர் இராம. இளங்கோவன், ஆதித் தமிழர் பேரவை தவசி, மாவட்ட தலைவர் நாத்திகஜோதி ஆகியோர் போராட்டத்தை விளக்கி உரையாற்றினர். மாவட்ட செயலாளர் நிவாசு தலைமையில் தோழர்கள் உறுதி மொழியேற்க ஜாதியை நியாயப்படுத்தும் பெண்களை கேவலப்படுத்தும் ‘மனு சாஸ்திரம்’ தோழர்களால் தீயிட்டு கொளுத்தப்பட்டது. போராட்டத்தில் பெண்கள் உள்பட சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். 20 தோழர்கள் கைதாயினர். போராட்டத்திற்கான ஏற்பாடுகளை ஈரோடு வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

### ஒட்டன் சத்திரம்

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் காலை 11 மணியளவில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் தொடங்கியது. க. மணிமேகலை தலைமையில் ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து தோழர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு, தாராபுரம் சாலைவரை முழக்கமிட்டுச் சென்றனர். ரயில் நிலையம் எதிரே மனு சாஸ்திரத்தை எரித்தனர். ஆதித் தமிழர் பேரவையின் மாவட்டச் செயலாளர் முருகன், திராவிடர் விடுதலைக் கழக மண்டல அமைப்புச் செயலாளர் சி.இராவணன், திண்டுக்கல் மாவட்டப் பொறுப்பாளர்கள் பெரியார் நம்பி, பழனி நல்லதம்பி, மதுரை மாவட்டப் பொறுப்பாளர்கள் முருகேசன், பாண்டியன், தேனி மாவட்டப் பொறுப்பாளர்கள் போடி சரவணன், குமரேசன், உதயசங்கர், ஒட்டன் சத்திரம் சேசுமேரி, காளையார்கோவில் முத்துக் குமார் உள்பட 50 தோழர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். எரித்த தோழர்களை காவல் துறை கைது செய்து திண்டுக்கல் சாலையிலுள்ள

2 ஆம் பக்கம்

### குமாரபாளையத்தில் மனு சாஸ்திரத்தை ஆதரித்து – பெரியார் படத்தை எரிக்க வந்த பா.ஜ.க.

நாமக்கல் மாவட்ட கழகத்தின் சார்பில் குமார பாளையத்தில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழக மகளிரணி தோழர் மணியம்மை போராட்டத்திற்கு தலைமையேற்றார். ஆதித் தமிழர் பேரவையின் மாவட்ட செயலாளர் தமிழரசு முன்னிலை வகித்தார். இலக்கியத் தளம் அமைப்பின் சார்பில் அன்பழகன், மக்கள் சிவில் உரிமை கழகம் பகலவன், ஆதித் தமிழர் பேரவை முன்னாள் நிர்வாகி செல்வக் குமார் ஆகியோர் போராட்டத்தை வாழ்த்திப் பேசினர். 11 மணிக்கு மனு எரிப்புப் போராட்டம் துவங்கியது. காவல்துறையின் அடக்குமுறையை மீறி மனு சாஸ்திரம் பெண்களாலேயே தீயிட்டு கொளுத்தப்பட்டது. போராட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து விஷ்வ இந்து பரிஷத், பா.ஜ.க. போன்ற மதவாத கட்சிகளைச் சேர்ந்த 40 பேருக்கு மேல் எதிரே திரண்டு பெரியார் படத்தையும், புத்தகத்தையும் கொளுத்த முயன்றனர்; காவல்துறை அவர்களை கைது செய்தது. எதிர்ப்பையும் மீறி நமது போராட்டம் வெற்றிப் பெற்றது. இதில் எட்டு பெண்கள் உள்பட 50 பேர் கலந்து கொண்டனர்.

# ‘சூத்திரன்’ என்றால் ஆத்திரம் கொண்டு எரிப்போம்!

*முதல் பக்கத் தொடர்ச்சி*

*பாரி திருமண மண்டபத்தில் அடைத்தது. மாலை 5.30 மணியளவில் விடுதலை செய்தது. தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தி.மோகன் கைது செய்யப்பட்ட தோழர்களுக்கு மதிய உணவை வழங்கினார்.*

### புதுச்சேரி

*புதுச்சேரி மாநிலம் பிள்ளைத் தோட்டத்தி லுள்ள தந்தை பெரியார் சிலையருகே காலை 10.30 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மனு சாஸ்திரம் எரிக்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சிக்கு கழகத்தின் மகளிரணித் தலைவர் சிவகாமி தலைமை தாங்கினார். கழகத்தின் புதுவை மாநிலத் தலைவர் லோகு. அய்யப்பன், சாதியை வலியுறுத்தும் மனு சாஸ்திரத்தைத் தடை செய்யக் கோரி முழக்கம் எழுப்பினார். அவரைத் தொடர்ந்து கழகத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்களும் மற்றும் தோழமை அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும் பெண்கள் மற்றும் குழந்தைகளோடு முழக்கமிட்டனர். அதன் பின்பு மனு சாஸ்திரம் எரிக்கப்பட்டது. அதுவரை பொறுமையாக இருந்த காவல்துறையினர் தீயை அணைக்க முற்பட்டனர். ஆனால், அவர்களால் இறுதியில் மட்டுமே தீயை அணைக்க முடிந்தது.*

*மனு சாஸ்திரம் சுமத்தியுள்ள இழிவை விளக்கும் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. மக்கள் ஆர்வத்துடன் வாங்கிப் படித்தனர்.*

*இப்போராட்டத்தில் இராவணன் படிப்பகத் தின் தலைவர் இர.அபிமன்னன், கழகத்தின் துணைத் தலைவர் வீராசாமி, செயலாளர் விசய சங்கர், அமைப்பாளர் தந்தை பிரியன், இளைஞரணித் தலைவர் அன்பெழிலன், அரியாங்குப்பம் பகுதி கழகத் தலைவர் எத்திராசு, நகரக் கழகத் தலைவர் சார்லசு மற்றும் மில்லர் விளையாட்டுக் கழகத் தோழர்களும் புதுவை குயில் பாசறையின் பொறுப்பாளர் ஆனந்தகுமாரும், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் புதுவை மாநிலப் பொறுப்பாளர் சிறீதர் மற்றும் கட்சியின் தோழர்களும் கலந்து கொண்டனர். தோழர்கள் கைது செய்யப்படவில்லை.*

### திருப்பூர்

*திருப்பூரில் பழைய பேருந்து நிலையம் முன்பு பல்லடம் திராவிடர் விடுதலைக் கழகத் தோழியர் சுபா தலைமையில் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் துரைசாமி முன்னிலை வகித்தார். இப்போராட்டத்தில் ஆதித் தமிழர் பேரவையும் தன்னை இணைத்துக் கொண்டது. முன்னதாக போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதித் தமிழர் பேரவையின் கனகசபை கண்டன உரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழக நிர்வாகிகள் துரைசாமி, முகில்ராசு ஆகியோர் உரை யாற்றிய பின் தோழர்கள் உறுதிமொழி ஏற்றனர்.*

*பின் காவல்துறையின் எதிர்ப்பையும் மீறி தோழர்களால் மனுசாஸ்திரம் தீயிட்டு கொளுத்தப் பட்டது. போராட்டத்தில் பெண்கள் 8 பேர், குழந்தைகள் 6 பேர், தி.வி.க.தோழர்கள், நிர்வாகிகள், அகிலன், கிளாக்குளம் செந்தில், சண்முகம், மணிகண்டன் உள்பட 45 பேர் ஆதித் தமிழர் பேரவை சார்பில் ஒருவர் உள்பட 60 பேர் கைது செய்யப்பட்டனர்.*

### மேட்டூர்

*மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் சேலம் மேற்கு மாவட்டம் சார்பில் மேட்டூர் தந்தை பெரியார் பேருந்து நிலையம் முன்பு மு.கீதா தலைமையில் காலை 10 மணிக்கு நடைபெற்றது. போராட்டத்திற்கு மண்டல செயலாளர் அ.சக்திவேல் முன்னிலை வகித்தார். மனு எரிப்புப் போராட் டத்திற்கு முன் ஆதித் தமிழர் பேரவையின் மாவட்ட செயலாளர் சந்திரன், காளியப்பன், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக மண்டல செயலாளர் அ.குமார், திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், சேலம் மேற்கு மாவட்ட தலைவர் கு.சூரியகுமார், மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் ஆகியோரின் கண்டன உரைக்குப்பின் ஜாதி எதிர்ப்பு, மனு எதிர்ப்பு உறுதிமொழியேற்று கழகத் தோழர்களால் மனு சாஸ்திரம் எரிக்கப்பட்டது. தோழர்கள் கைது செய்யப்பட்டு மேட்டூர் பாப்பாயம்மாள் திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டனர். இதில் பெண்கள் 12 பேர், ஆண்கள் 71 பேர், குழந்தைகள் 5 பேர் மொத்தம் 88 பேர் கைது செய்யப்பட்டனர்.*

### கோவை

கோவை காந்திபுரம் பேருந்து நிலையம் அருகில் (தமிழ்நாடு ஹோட்டல் எதிரில்) நடைபெற்ற மனு சாஸ்திர எரிப்புப் போராட்டத்திற்கு, ஆதித் தமிழர் பேரவையை சார்ந்த தீபா தலைமையேற்றார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டார். உறுதிமொழியை கழகத் தலைவர் முன்மொழிய அனைத்து தோழர்களும் வழிமொழிந்தனர். ஒலி முழக்கங்கள் எழுப்பப்பட்ட பிறகு மனு சாஸ்திர பிரதிகள் எரிக்கப்பட்டன. காவல்துறை அதை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்; தடுக்க முடிய வில்லை. 17 பெண்கள், 2 குழந்தைகள் உள்பட 77 பேர் கைது செய்யப்பட்டு, இரத்தினபுரி வெங்க டேசுவரா திருமண மண்டபத்தில் அடைக்கப் பட்டனர்.

### சென்னை

சென்னையில் தியாகராயர் நகரில் பெரியார் இறுதி உரையாற்றிய இடத்தின் அருகே நிறுவப்பட்டுள்ள தந்தை பெரியார் சிலை அருகில் மனு சாஸ்திரம் உணர்ச்சி முழக்கங்களுடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. மயிலைப் பகுதி கழகத் தோழர் சா.ஜெயந்தி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை யில் நடந்த போராட்டத்தில் 200 தோழர்கள் பங்கேற்றனர். பல்வேறு பகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்கள் தனி வேன்களில் போராட்டப் பகுதிக்கு குடும்பம் குடும்பமாய் திரண்டனர். மே 17, சேவ் தமிழ், தமிழ்நாடு மக்கள் கட்சியைச் சார்ந்த தோழர்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தோழர்களை வழியனுப்ப வந்திருந்தனர்.

தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், மண்டல செயலாளர் அன்பு தனசேகரன், மாவட்ட தலைவர் டார்வின் தாசன், மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்ட அமைப்பாளர் சுகுமாறன், பொருளாளர் வேழவேந்தன், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் க.ஜெயப்பிரகாசு, புரசைப் பகுதி அமைப்பாளர் ந.தட்சிணாமூர்த்தி, புது வண்ணைப் பகுதி அமைப்பாளர் ஏசு, சூளை பகுதி அமைப்பாளர் சி.அருள்தாசு, பாடி பகுதி அமைப்பாளர் மு.கனகராஜ், வில்லிவாக்கம் பகுதி அமைப்பாளர் சி.ஞா. ஆதவன், திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் செல்வகுமார், பொருளாளர் ஆனந்தன், மயிலை பகுதி தலைவர் கி.இராவணன், செயலாளர் பா. ஜான்சன், பொருளாளர் மாரி முத்து, அமைப்பாளர் மனோகர், சைதை பகுதி அமைப்பாளர் மனோகரன், மேடவாக்கம் பகுதி அமைப்பாளர் மு. சக்திவேலு உள்ளிட்ட 91 தோழர்கள் மனு சாஸ்திரத்தை எரித்து கைதானார்கள். பேராசிரியர் சரசுவதி, தஞ்சை கிருஷ்ணவேணி, ஜெயந்தி, அம்பிகா, பூர்ணிமா, தமிழ்ச் செல்வி, கமலம், செல்வி, கமலா ராணி உள்ளிட்ட பெண்கள் மனு சாஸ்திரத்தை எரித்து கைதானார்கள். சைதை அன்பரசு, பேராசிரியர் பிச்சை, உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி, சேவ் தமிழ் அமைப்பைச் சார்ந்த இளங்கோ உள்பட தோழர்களும் மனு சாஸ்திரத்தை எரித்து கைதானார்கள். மனு சாஸ்திரத்தை எரிப்பதற்கு முன் தலைமை தாங்கிய ஜெயந்தி உறுதிமொழியைப் படிக்க, தோழர்கள் அனைவரும் உறுதிமொழியேற்ற காட்சி உணர்ச்சி மயமாக இருந்தது.

“நாங்கள் சமுதாயத்தை இழிவுபடுத்தும் நான்கு வர்ண கோட்பாடுகளை எதிர்ப்பவர்கள், அதனடிப் படையில் உருவான ஜாதி தீண்டாமை பெண்ணடிமையை மறுப்பவர்கள் இந்த சமுதாய ஒடுக்குமுறையை சமூகத்தின் சட்டமாக்கிய மனு சாஸ்திரமும் அதன் சிந்தனைகளும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக மனு சாஸ்திரத்தை எதிர்க்கிறோம். சமூக சமத்துவம் மலரும் வரை இந்த மனு சாஸ்திர நச்சுக் கருத்துகளை எதிர்த்துப் போராடுவோம்” என்று உறுதியேற்கிறோம். “மடியட்டும் மனு சாஸ்திரம்; வெல்லட்டும் மனித சமத்துவம்” என்ற உறுதிமொழியைத் தொடர்ந்து மனு சாஸ்திரம் எரிக்கப்பட்டது. “பெரியார்-அம்பேத்கர் எரித்த மனுசாஸ்திரம் இதோ எரிகிறது; எரிகிறது. பார்ப்பனிய ஜாதி-தீண்டாமைக்கு எதிராக, எரிகிறது; எரிகிறது; மனு சாஸ்திரம் எரிகிறது” என்ற உணர்ச்சி முழக்கங்களுக்கிடையே மனு சாஸ்திரம் எரிக்கப்பட்டது. “சூத்திர இழிவு, பெண்கள் மீதான இழிவு, விவசாயம் செய்வதே பாவம்; சூத்திரன் படிக்கக் கூடாது; வேதத்தைக் கேட்கும் சூத்திரன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்” என்ற ‘மனு சாஸ்திரங்களின்’ சுலோகங்கள் தனித்தனியே நூல் போன்ற வடிவில் அச்சிடப்பட்டு, தீயில் எரிக்கப்பட்டன. கழகத் தோழர்கள் கைது செய்து வைக்கப்பட்டிருந்த திருமண மண்ட பத்தில் கோவை மற்றும் சென்னை மாவட்டங்களைச் சேர்ந்த ஈழப் போராட்டக் குழுவைச் சார்ந்த மாணவர்கள், தமிழக மக்கள் கட்சியைச் சார்ந்த தோழர்கள் அருண்சோரி, கண்ணன் உள்ளிட்ட தோழர்கள் நேரில் வந்து சந்தித்து, வாழ்த்துத் தெரிவித்தனர். பிற்பகல் 2 மணியளவில் மண்டபத்தில் அம்பேத்கர் தமிழ்த் திரைப்படம் மயிலைப் பகுதி கழகத் தோழர்கள் ஏற்பாட்டில் திருமண மண்டபத்தில் திரையிடப் பட்டது. மாலை 6 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

### கல்லக்குறிச்சி

விழுப்புரம் மாவட்டக் கழகம் சார்பில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் காலை 11.30 மணியளவில் கல்லக்குறிச்சி அம்பேத்கர் சிலை முன்பு நடைபெற்றது. போராட்டத்திற்கு சபரிமாளா தலைமை தாங்கினார். சுலோசனா, திண்டிவனம் ரேணுகா சிவக்குமார், பரமேசுவரி, முனியம்மாள், மாவட்ட பொறுப்பாளர்கள் ச.பெரியார் வெங்கட் ச.கா. இளையராஜா, செ.பிரபு, சி.சாமிதுரை, ந.வெற்றிவேல், செநாவப்பிள்ளை, சி. ஆசைத்தம்பி, செ.சாக்ரடிசு, விவசாய விடுதலை முன்னணி ராமலிங்கம், மனித உரிமை அமைப்பைச் சார்ந்த சங்கை ரவி, ஆறுமுகம் கழகத் தோழர்கள் க. ராமர், மு.வ. செல்வராஜ், மு.ஜான் சிவக்குமார், நா.அய்யனார் உள்பட 100க்கும் மேற்பட்ட தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். போலீசார் தோழர்களை கைது செய்யவில்லை.

### மயிலாடுதுறை

மயிலாடுதுறையில் நடந்த எரிப்புப் போராட்டத்தில் இரண்டு இடங்களில் தோழர்கள் மனு சாஸ்திரத்தை எரித்து கைதானார்கள். போராட்டத்துக்கு முதல் நாள் ஏப்.13 அன்று மயிலாடுதுறையில் 3 பகுதிகளில் போராட்டத்தை விளக்கி, தெருமுனைக் கூட்டங்கள் கழக சார்பில் நடத்தப்பட்டது. முனைவர் ஜீவா, தனவேந்திரன், சுப்பு மகேஷ் ஆகிய தோழர்கள் உரையாற்றினர். 14 ஆம் தேதி காலை 11 மணியளவில் தஞ்சை மண்டல அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் இளையராசா தலைமையில் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் மனு சாஸ்திரம் கட்டமைத்த பார்ப்பனிய ஜாதி-தீண்டாமை ஒழியட்டும் என்ற முழக்கத்தோடு மனுசாஸ்திரம் தீயிட்டு எரிக்கப் பட்டது. நாகை மாவட்ட கழகத் தலைவர் ம. மகாலிங்கம், செயலாளர் மகேஷ், பொருளாளர் விஜயராகவன், நகர கழகத் தலைவர் ராஜி சங்கர் உள்ளிட்ட கழகத் தோழர்களும், மன்னை காளிதாசு தலைமையில் அய்ந்து தோழர்களும், தஞ்சை பாரி, திருவேங்கடம், கரிகாலன் உள்ளிட்ட தோழர்களும், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் சிவக்குமார் தலைமையில் 5 மாணவர்களும், தமிழர் உரிமை இயக்கத் தலைவர் சுப்பு மகேஷ் தலைமை யில் 10 தோழர்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத் தலைவர் தனவேந்திரன்தலைமையில் 5 தோழர் களும் கழகப் பேச்சாளர் முனைவர் ஜீவாவும் மனு சாஸ்திரத்தை எரித்தனர். தொடர்ந்து அடுத்த 45 நிமிட இடைவெளியில் மயிலாடு துறையில் அஞ்சல் நிலையம் எதிரில் 10 தோழர்கள் மனு சாஸ்திரத்தை உணர்ச்சி முழக்கங்களோடு எரித்தனர். 46 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

### திருச்சி

திருச்சி மாவட்ட கழகத்தின் சார்பில் 14.4.2013 அன்று காலை 10 மணிக்கு காதிபிராப்ட் எதிரில் மனுசாஸ்திர எரிப்புப் போராட்டம் திருச்சி

5 ஆம் பக்கம்

# இதுநகல்எரிப்புஅல்ல;நச்சுவேர்களின்எரிப்பு



சென்னை


சென்னை


ஒட்டன்சத்திரம்


கோபி


தூத்துக்குடி


கரூர்


ஈரோடு


ஓசூர்


நாகை


கள்ளக்குறிச்சி

# இரண்டாயிரம் ஆண்டு ஆரியத் திமிருக்கு தீ !



கோவை



கோவை



புதுச்சேரி



சேலம்



குமாரபாளையம்



மேட்டூர்



திருச்சி



திருப்பூர்

# ஜாதி, தீண்டாமை, பெண்ணடிமைக்கு எதிராக உறுதி ஏற்ற தோழர்கள்

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

மண்டல அமைப்புச் செயலாளர் புதியவன் தலைமையில் நடந்தது. மனு சாஸ்திரத்தை எரித்து 15 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். மாவட்ட தலைவர் ஆரோக்கியசாமி, செயலாளர் குமார், அமைப்பாளர் குணாராஜ், பெரம்பலூர் மாவட்ட தலைவர் தாமோதரன், புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளர் கார்த்திகேயன், புதிய தமிழகம் கட்சி மாவட்ட பொருளாளர் சங்கர், அய்யனார், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ரமணா, தமிழ் புலிகள் அமைப்பு மாநில துணை செயலாளர் முகில்ராசு ஆகியோர் பங்கேற்றனர். கழகத்தினர் மட்டும் 15 பேர் கைதானார்கள்.

### கரூர்

கரூர் மாவட்ட கழகத்தின் சார்பில் காலை 11 மணிக்கு கரூர் பேருந்து நிலையம் அருகில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழகத் தலைவர் பொறியாளர் காமராஜ், மாவட்ட தலைவர் பாபு, தோழர்கள் மோகன்தாசு, சத்யசீலன் உள்ளிட்ட 12 தோழர்கள் கைது செய்யப் பட்டனர்.

### பொள்ளாச்சி

மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம், பொள்ளாச்சியில் புதிய பேருந்து நிலையம் எதிரிலுள்ள தொலைபேசி அலுவலகம் முன்பு கழக வெளியீட்டுச் செயலாளர் தமிழ்ச்செல்வி தலைமையிலும், ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் இரா. அதியமான், ஜாதி ஒழிப்பு விடுதலை முன்னணியைச் சேர்ந்த கணபதி ஆகியோர் முன்னிலையிலும் எழுச்சியுடன் நடைபெற்றது.

காலை 11 மணிக்கு தொடங்கிய போராட்டத்தில் மனு சாஸ்திர இழிவுகளை மக்கள் அறியும் வண்ணம் முழக்கங்கள் தோழர்களால் முழங்கப் பட்டது. முழக்கங்களை தமிழ்ச்செல்வி சொல்லச் சொல்ல தோழர்களால் முழக்கமிடப்பட்டது. பின்னர் இரா.அதியமான் கண்டன உரை யாற்றினார். அவர் தனது உரையில், "மனு சாஸ்திர மானது மக்கள் "ஹார்ட் டிஸ்கான" மூளையில் "சாப்ட்வேர்" போல ஊன்றிப் போய் விட்டது என்றும், இந்த மனு சாஸ்திரமானது ஒட்டுமொத்த மனித நேயத்திற்கு எதிராகவும், ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்கும், பெண்களுக்கும் எதிராகவும் உள்ளது. இந்திய அரசியல் சட்டத்தை புரட்சியாளர் அம்பேத்கர் எழுதியிருந்தாலும்கூட அவரே, 'இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வில்லையெனில் இந்த சட்டத்தை எரிப்பதில் முதல் ஆளாக நானே இருப்பேன்' என்று கூறினார் என்றும், தம் வாழ்நாளின் பெரும் பகுதியை தனது மூத்திரச் சட்டியை தூக்கிக்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் பாடுபட்ட பெரியாரின் கொள்கைக்கு கிடைத்த வெற்றி இந்தப் போராட்டம். இதை பெரியாரின் கொள்கை வழி நடக்கும் திராவிடர் விடுதலைக் கழகம் எடுத்திருப்பது பெரியாரின் கொள்கைக்கு கிடைத்த வெற்றி" என்றும் கூறினார். தொடர்ந்து பேசிய கணபதி, "தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட் டோரின் ஒற்றுமையைச் சீர்குலைப்பது மனு சாஸ்திரம் என்றும், மனு சாஸ்திரத்தை ஒழிப்பது ஒன்றே சாதி ஒழிப்புக்கு முதல்படி" என்றும் பேசினார்.

அடுத்து தமிழ்ச்செல்வி, மனு சாஸ்திர எதிர்ப்பு உறுதிமொழியை வாசிக்க தோழர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். உறுதிமொழி வாசிக்க வாசிக்கவே காவல்துறையினர் கைது நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியவுடனே, தோழர்களுக்கும் காவல்துறையினருக்கும் தள்ளு முள்ளு ஏற்பட்டது. இருப்பினும் தோழர்கள் விடாமல் பல்வேறு திசைகளிலும் சிதறி பல்வேறு பக்கங்களில் மனுசாஸ்திரத்தை தீயிட்டுக் கொளுத் தினர். காவல்துறை கெடுபிடிகளை மீறி தோழர்கள் மனு சாஸ்திரத்தை முற்றிலும் எரித்து சாம்ப லாக்கினர். காவல்துறை ஆய்வாளர் ஒருவர் ஆதித் தமிழர் பேரவை தோழர் ஒருவரையும் கழகத் தோழர்களையும் மிகவும் வலுக்கட்டாயமாக கைது செய்ய முற்பட்டபோது காவல்துறைக்கும் தோழர் களுக்கும் சற்றேறக்குறைய யுத்தம் போலவே நடை பெற்றது. தோழர்கள் சிலரும், காவலர்கள் சிலரும் சாலையில் விழுந்துவிட்டனர். காவல்துறையின் அத்துமீறலைக் கண்டித்து முழக்கங்கள் ஒலித்தன. பேருந்து நிலையம் முன்பு நடந்ததால் மக்கள் கூட்டம் கூடிவிட்டது. போராட்டத்தை கவனமாக வும், வியப்பாகவும் பார்த்தனர்.

இந்தப் போராட்டத்தில் சிறு வயது குழந்தைகள், பெண் தோழர்கள் சுடரொளி, கவிதா, ஜெயசாந்தி, கிளாரா உள்பட பலரும் கலந்து கொண்டனர். கழகத் தோழர்கள் 51 பேரும், ஆதித் தமிழர் பேரவையைச் சேர்ந்த தோழர்கள் 40 பேரும், ஜாதி ஒழிப்பு விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் 2 பேரும் கலந்து கொண்டனர். தோழர் கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, பொள்ளாச்சி காவலர் குடியிருப்பு மண்டபத்தில் வைக்கப்பட் டனர். உள்ளே பெரியார் அம்பேத்கர் போராட்ட வரலாறுகளை விளக்கி தோழர்கள் உரையாற்றினர்.

### ஈரோட்டில்

ஈரோடு பேருந்து நிலையத்தில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் காவல்துறையின் தடையை மீறி நடைபெற்றது. கழகத்தின் மாநிலப் பொருளாளர் ப. இரத்தினசாமி தலைமை தாங்கினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டத் துணைச் செயலாளர் கஸ்தூரி, மகளிர் விடுதலை இயக்க மாவட்டச் செயலாளர் அப்சல் உனிசா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆதித் தமிழர் பேரவை, தமிழக ஒடுக்கப்பட் டோர் விடுதலை இயக்கத் தோழர்கள் இந்நிகழ்வில் பங்கு கொண்டனர். முன்னதாக அங்கு வந்த காவல்துறையினர், தோழர்கள் எரிப்பதற்காக கொண்டு வந்த மனு சாஸ்திர நகல்களை பறிமுதல் செய்தனர். போராட்டத்தை வாழ்த்தி,

கன. குறிஞ்சி (மக்கள் சிவில் உரிமைக் கழகம்), வழக்கறிஞர் கி.சிதம்பரம், நிலவன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), அ.செ. கந்தசாமி (லஞ்ச ஊழல் எதிர்ப்பு இயக்கம்), வழக் கறிஞர் ராதாகிருஷ்ணன், கி.வே.பொன்னையன் (தற்சார்பு விவசாயிகள் சங்கம்) ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து தோழர்கள் மனு சாஸ்திரத்தை எரித்தனர். அவற்றைப் பிடுங்கிய காவல்துறையினர் தோழர்களைக் கைது செய்தனர்.

ஆதித் தமிழர் பேரவையைச் சார்ந்த தோழர்கள்: வீரவேந்தன் (ஈரோடு மாநகர தலைவர்), அறிவழகன், பழனிச்சாமி (மாநகர அமைப்புச் செயலாளர்), முருகேசன் (மாவட்ட அமைப்பாளர்), செம்பான் (வடக்கு மாவட்டத் தலைவர்).

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தோழர்கள்: கஸ்தூரி, அப்சல் உனிசா, ஜோஸ்வா ஸ்டீபன், ஈஸ்வரன், ஓ.செ. சென்னிமலை, தொழிலாளர் விடுதலை முன்னணி தோழர் வெற்றிச் செல்வன்.

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் : ப.இரத்தினசாமி (மாநிலப் பொருளாளர்), செல்லப் பன் (மாவட்டத் தலைவர்), கு. சண்முகப் பிரியன் (மாவட்டச் செயலாளர்), ப. குமார் (மாவட்ட அமைப்பாளர்), சி.செல்வராசு (மாவட்ட அமைப்பாளர்), சிவாமந்தம் (ஈரோடு நகர செய லாளர்), சத்தியராசு (சித்தோடு கிளைத் தலைவர்), சே.ரமேசு குமார் (சென்னிமலை ஒன்றியத் தலைவர்), இசைக்கதிர் (சென்னிமலை), இனியவன் (சென்னிமலை), ப.சக்திவேல் (நத்தக் கடையூர்). பெருமாள்மலை தோழர்கள்: பொ.ராசண்ணா, மு.தங்கமணி, மு.செல்வமணி, ரா. சக்திவேல், ஆ.முருகன், தம்பிராசு. அ.கிருஷ்ணன் (ரங்கம் பாளையம்), க. எழிலன் (சித்தோடு), கு.வீரமுத்து (மரவபாளையம்) ஆகியோர் கைதானார்கள்.

### ஒசூர்

கிருஷ்ணகிரி மாவட்டம் சார்பில் 14.4.2013 அன்று காலை 10.30 மணிக்கு ஒசூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு முத்துலட்சுமி அம்மாள் தலைமையில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் கோ.பிரேம்குமார், அமைப்பாளர் மு.பழனி, துணைத் தலைவர் ச.கிருஷ்ணன், மாவட்ட தலைவர் தி.குமார், தர்மபுரி மாவட்ட அமைப்பாளர் வேணு கோபால், பரமசிவம், தமிழ்த் தேசிய குடியரசு இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் தமிழரசன் உள்ளிட்ட 27 பேர் மனு சாஸ்திரத்தை எரித்தனர். அனைவரும் கைது செய்யப்பட்டு, ஒசூர் காவல்நிலையத்தில் வைக்கப்பட்டனர். மாலை 6 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

### காஞ்சிபுரம்

காஞ்சி மாவட்டம் சார்பாக 14.42013 அன்று காலை 11 மணியளவில் காஞ்சி சங்கரமடம் வாசலில் கன்னியாகுமரி தலைமையில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. காஞ்சி மாவட்ட தலைவர் டேவிட் பெரியார், செயலாளர் தினேஷ் குமார், அமைப்பாளர் செங்குட்டுவன், சேகர், ரவி பாரதி, திவ்யபாரதி, வேலூர் மாவட்ட அமைப் பாளர் வி.திலீபன் உள்ளிட்ட 40 தோழர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். காவல்துறை கைது செய்யவில்லை.

### சேலம்

காலை 10 மணியளவில் சேலம் கிழக்கு மாவட்டம் சார்பாக சேலம் அம்பேத்கர்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. சேலம் பழைய பேருந்து நிலையம் போஸ் மைதானத்தில் குறுத்துகள் (குழந்தைகள்) அமைப்பைச் சார்ந்த லட்சுமி பிரியா தலைமையில் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. ஆதி தமிழர் பேரவையைச் சார்ந்த க.அன்பழகன், மக்கள் விடுதலை அமைப்பைச் சார்ந்த மணிமாறன், ஒடுக்கப்பட் டோர் விடுதலை முன்னணியைச் சார்ந்த வின்சென்ட், தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம் பூமொழி, மக்கள் சனநாயக குடியரசுக் கட்சியைச் சார்ந்த கண்ணன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் சார்ந்த இளமாறன், திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த ஏற்காடு பெருமாள் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிகழ்வில் 150 தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர்கள் 81 மனு சாஸ்திரத்தை எரித்து கைதானார்கள். சூசன் அம்மாள் திருமண மண்டபத்தில் வைத்து, பிறகு மாலை 6 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

## சட்ட "நிபுணராகிறார்" சேலம் காவல்துறை அதிகாரி(!)

## மனு சாஸ்திரம் அரசியல் சட்டத்துக்கு சமமானதாம்!

மனு சாஸ்திரம் என்பது அரசியல் சட்டத்துக்கு நிகரானது, அதை எரிப்பது குற்றம் என்று சேலம் மாநகர தெற்கு சரகம் காவல் உதவி ஆய்வாளர் ஆ.இரவி சங்கர் என்பவர் எழுத்து மூலம் கழகத்துக்கு பதில் அனுப்பியுள்ளார். சேலத்தில் மனு சாஸ்திரத்தை போஸ் மைதானத்தில் எரிக்கப் போகிறோம் என்ற தகவலை மாவட்டக் கழக சார்பாக காவல் நிலையத்தில் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. போராட்டத்துக்கு அனுமதி கேட்கவில்லை. ஆனால், காவல் உதவி ஆய்வாளர் அனுமதி கேட்டதாக அவரே தீர்மானித்துக் கொண்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக ஒரு கடிதத்தை எழுதி அனுப்பினார். அதில், "மனு சாஸ்திர எரிப்பு இந்து மக்களின் மனத்தை புண்படுத்துவதாக இருக்கும் என்பதால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படலாம் என்றும், மேலும் மனு சாஸ்திரம் என்பது சட்டப் புத்தகத்துக்கு நிகராகக் கருதப்படுவதாலும் அதை எரிப்பது சட்டம் ஒழுங்கை பாதிக்கும்" என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சட்டத்துக்கு நேர் எதிரான கருத்துகளைக் கொண்டதுதான் மனு சாஸ்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

DATE OF PUBLICATION 17.04.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# நாம் சரியாகவே நடைபோடுகிறோம்!

திராவிடர் விடுதலைக் கழக செயல்வீரர்கள் 18 ஊர்களில் திட்டமிட்டபடி மனு சாஸ்திரத்தை எரிக்கும் போராட்டத்தை நடத்தி முடித்துவிட்டனர். திட்டமிடப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் போராட்டம் நடந்தது, தோழர்களின் உறுதியான கொள்கை உணர்வுக்கு கட்டியம் கூறுகிறது. ஒன்றிரண்டு பகுதிகளைத் தவிர, எல்லா ஊர்களிலும் பெண்களே தலைமையேற்று போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். எந்த மனு சாஸ்திரம், பெண்களை மனிதர்களாகக்கூட ஏற்க மறுத்ததோ, அதே 'மனு'வுக்கு பெண்களே தலைமையேற்று தீயிலிட்டு பொசுக்கியிருக்கிறார்கள்.

ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனர் தோழர் அதியமான், ஏப்.14 அன்று நிகழவிருந்த தமது அமைப்பின் நிகழ்ச்சிகளை வேறு தேதிக்கு தள்ளி வைத்துவிட்டு, தமது தோழர்களுடன் பொள்ளாச்சியில் நடந்த போராட்டத்தில் பங்கேற்றிருப்பதில் பெருமிதம் கொள்கிறோம். கொள்கை தளத்தில் நீளும் இந்த நட்புக் கரங்கள் நமது எதிர்கால செயல்பாட்டுக்கு வலிமை சேர்ப்பதாகவே உணருகிறோம்.

ஜாதி-தீண்டாமையின் கொடூரமான அடக்குமுறைகளை எதிர்க்கும் போராட்டக் களங்கள் இன்றைய அவசியத் தேவைகளாக நம்முன் நிற்கின்றன. இதற்கு முகம் கொடுக்கும் அதே வேளை, மற்றொரு அடிப்படையான கருத்தை நாம் எப்போதும் கவனத்தில் கொண்டு செயலாற்ற கடமைப்பட்டுள்ளோம். ஜாதி வெறி, தீண்டாமை அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் அதே வேளை, இதற்கான கருத்தியல்களை வழங்கும் "புனித" நூல்களின் அதிகாரங்களையும் அதன் மீதான மக்கள் நம்பிக்கைளையும் தகர்த்திட வேண்டும் என்பது மிக மிக முக்கியம்.

பெரியார் கூறுகிறார்:

> "ஒரு மனிதனுக்கு கீழோ அல்லது மேலோ ஜாதி என்பது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். அதற்கு மேல் ஜாதி வித்தியாசத்துக்கு ஆதாரமுள்ளவைகளை அடியோடு அழிக்க முயலவேண்டும். அப்படிச் செய்யாமல் உயர்வு தாழ்வை போக்கிவிடலாமென்று கருதுதல் நுனி மரத்தில் நின்று கொண்டு அடிமரத்தை வெட்டுகின்ற மனிதனின் முட்டாள் செய்கையேயாகும்." (5.10.1929 'திராவிடன்')

அம்பேத்கர் கூறுகிறார்:

> "ஜாதி தெய்வீக அடிப்படை கொண்டதாக இருக்கிறது. எனவே ஜாதிக்குத் தரப்பட்டுள்ள புனிதத்தையும் தெய்வீகத்தையும் நீங்கள் ஒழித்தாக வேண்டும். அதாவது வேதங்கள், மற்றும் சாஸ்திரங்களின் அதிகாரத்தை ஒழிக்க வேண்டும்." ('ஜாதி ஒழிப்பு' நூல்)

ஜாதி, தீண்டாமை ஒழிப்பில் நாம் இப்போது சந்தித்துள்ள களம் இந்த 'புனித'த்துக்கு எதிரானதே ஆகும். அதன் அதிகாரங்களை மகத்துவத்தை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி, அதனை செயலற்றதாக்குவதற்காகவே மக்கள் முன் 'மனு சாஸ்திரங்களை' எரித்துள்ளோம். மனு சாஸ்திரத்தை உருவாக்கியதாகக் கூறப்படும் அந்த "பிரம்மா"வே நம்மைத் தண்டிக்கவோ தடுக்கவோ ஓடி வரவில்லை. காவல்துறைதான் தடுக்க முயற்சித்தது. மூன்று ஊர்களில் அந்த காவல்துறையும்கூட கண்டுகொள்ளவில்லை.

ஆனால், ஜாதியைக் கட்டிக் காப்பாற்றும் பார்ப்பனிய சக்திகள், ஊடகங்கள் இதில் 'அசாத்திய மவுனத்தை' கடைபிடித்தன. ஆர்.எஸ்.எஸ்.ஸோ, இந்து முன்னணியோ, மனு சாஸ்திரத்தை 'பூணூல்' வழியாக பின்பற்றிக் கொண்டிருக்கும் 'பிராமண' சங்கமோ நமது போராட்டம் குறித்து கடும் மவுனம் சாதித்தன. இந்த மவுனத்தின் பின்னால் மாபெரும் சதி அடங்கியிருக்கிறது. இந்த 'மனு சாஸ்திரம்' விவாதக் களத்துக்கு வந்துவிட்டால், தங்களின் ஆதிக்க முகத்திரை மக்கள் மன்றத்தில் கிழிந்து தொங்கிவிடும் என்பதே இந்த மவுனத்துக்குள் மறைந்து நிற்கும் சூழ்ச்சி!

பார்ப்பனர்கள் இப்படி என்றால், தமிழர்களுக்காக களத்தில் நிற்கும் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும்கூட இதே மவுனத்தையே வெளிப்படுத்தின என்பதை வேதனையுடன் பதிவு செய்கிறோம். மனுசாஸ்திரம் எரிக்கப்பட வேண்டுமா? வேண்டாமா என்ற கருத்தைக்கூட இவர்கள் வெளிப்படுத்த வில்லையே! புரட்சி பேசும் இடதுசாரிகள்கூட 'மனு சாஸ்திர' எதிர்ப்பு இயக்கம் பல மாதங்களாக நாம் நடத்திய போதும் அது குறித்து ஒரு வார்த்தைகூட தங்கள் ஏடுகளில் வெளிவந்துவிடக் கூடாது என்று உறுதிபூண்டு செயல்பட்டனர்!

தீண்டாமைக் கொடுமைகள் பற்றிப் பேசும், எழுதும் அமைப்புகளும் ஏடுகளும்கூட அதற்கான அதிகாரங்களை வழங்கிடும் "புனித நூல்கள்" பக்கம் தங்கள் எதிர்ப்பு திருப்பி விடக் கூடாது என்று "கண்ணும் கருத்துமாக" - பார்ப்பனியத்தின் எதிர்ப்புக்கு உள்ளாகிவிடக்கூடாது என்ற பதைப்பில் கைகட்டி வாய்ப்பொத்தியே நின்றன.

இத்தகைய எதிர்மறை சமூகச் சூழலில்தான் நாம் பெரியார், அம்பேத்கர் தந்த கருத்தியல் ஆயுதங்களை கரங்களில் ஏந்தி புறப்பட்டோம். இந்த லட்சியப் பணிகளுக்கு விளம்பரம் கிடைக்காது; பெரியார் காலம் போலவே இருட்டடிப்புக்கும் கள்ள மவுனத்துக்கும் உள்ளாக்கப்படும் என்பதை அறிந்தே தன்மானத்துக்கான - இயக்கத்தை முன்னெடுத்தோம்! ஆம் அந்த 'புனித' எதிர்ப்புப் போரில் திராவிடர் விடுதலைக் கழகம் மட்டுமே களத்தில் நிற்கிறது என்பது நிதர்சனமான உண்மை.

எதைச் செய்தாவது அன்றாடம் பத்திரிகைகளில் பெயர் வரவேண்டும் என்பதற்காக "போட்டிக் கடை" போட்டு நாம் இயக்கம் நடத்துபவர்களும் அல்ல; இருட்டடிப்புகள் கள்ள மவுனங்களை புறந்தள்ளி லட்சியத்தை முன்னெடுப்பவர்கள்.

மக்களை கிராமம் கிராமமாக சந்தித்தோம்; அவர்களிடம் நேரடியாகவே கருத்துகளை விதைத்தோம்; மாநாடுகள் வழியாக பரப்புரை இயக்கங்கள் வழியாக மக்களை நேரடியாக சந்தித்தோம்; அந்த விதைப்புகள் வீண்போகாது. அதன் விளைச்சலை நாம் பார்க்கத்தான் போகிறோம்!

சமூகத்தின் ஒவ்வொரு அசைவிலும் ஊடுருவி நிற்கும் பார்ப்பனிய மனு சாஸ்திரம், தனது அடையாளத்தை நீண்ட காலத்துக்கு முகமூடிப் போட்டுக் கொண்டு மறைந்து 'கண்ணாமூச்சி' காட்டிக் கொண்டிருக்க முடியாது. அந்த முகமூடி கிழியும் வரை நாம் ஓயப்போவதும் இல்லை.

ஆம்! வேறு எவரும் செய்ய முன் வராத இந்தத் தொண்டூழியத்தை தோள்மேல் சுமந்து களம் கண்டுள்ளது நமது கொள்கை அணி! நமது தோழர்கள் இந்தப் போராட்டத்தின் வழியாக சாதித்துள்ளார்கள்!

எதிர் நீச்சலில் நாம் நடத்திய போராட்டம் இது. மாலைகள், பாராட்டுகளை எதிர்பார்க்காத களம் இது. இந்த லட்சியப் போராட்டத்தில் நாம் ஓயப் போவதில்லை. கள்ள மவுனங்கள் உடைபடும் காலத்தை நாம் விரைவில் சந்திக்கத்தான் போகிறோம்.

'மனு சாஸ்திரத்தை' நெருப்பிலிட்ட கொள்கைத் தோழர்களே! நெஞ்சுயர்த்தி பெருமை கொள்ளுங்கள்!

நாம் அடிமரத்தை வெட்டுகிறோம்; சாஸ்திர அதிகாரத்தை நெருப்பில் பொசுக்குகிறோம்.

ஆம்! நாம் பெரியார், அம்பேத்கரின் லட்சியப் பாதையில் சரியாகவே நடைபோடுகிறோம்!

இறுதியில் வெல்லப்போவது நாம்தான்! **– இரா**

## கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு விடுதலை சிறுத்தைகள் வழங்கிய "பெரியார் ஒளி" விருது

கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் "பெரியார் ஒளி" விருது வழங்கப்பட்டது. ஏப்.14 அன்று கழகம் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் நடத்தியதால் தோழர் கொளத்தூர் மணி, கோவை போராட்டத்தில் பங்கேற்று கைது செய்யப்பட்டார். எனவே, அவருக்கு பதிலாக தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மயிலாப்பூரில் நடந்த விழாவில் தொல் திருமாவளவன் அவர்களிடமிருந்து விருதைப் பெற்றுக் கொண்டார். ரூ.50,000 தொகையும் விருதுடன் பரிசாக வழங்கப் பட்டது. கழகம் நடத்தி வரும் ஜாதி-தீண்டாமை ஒழிப்பு இயக்கத்துக்கு கிடைத்த ஊக்கமாகக் கருதி கழக சார்பில் தபசி குமரன் விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு நன்றி தெரிவித்தார்.

### நன்கொடை

மேட்டூர் அணை சாம்பள்ளி செந்தில் குமார் - ரூ.2000-மும்; சென்னை முகமது சுல்தான் - ரூ.4000-மும் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதிக்காக கழகத் தலைவரிடம் 2.4.2013 அன்று வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 18th April 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஏப்ரல் 25, 2013 | புரட்சி 12 | முழக்கம் 15 | விலை: ரூ.3.00

# "தமிழீழ சுதந்திர சாசனம்": அமெரிக்காவில் மே மாதம் முரசறையப்படுகிறது

***நா**டு கடந்த தமிழீழ அரசாங்கம் உலகத் தமிழர்களின் கருத்து கேட்டு உருவாக்கப்படும் ஈழ விடுதலை சாசனத்தை அமெரிக்காவில் மே மாதம் முரசறைய இருக்கிறது.*

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் வாக்கெடுப்பு வழியாக தேர்வு செய்த உறுப்பினர்கள், அமைச்சர்களைக் கொண்ட அமைப்பு 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்' ஆகும். 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்' என்பது ஈழத்துக்கான நிழல் அரசு (Government in exide) அல்ல. விடுதலைக்கு போராடிய நாடுகள் ஏதேனும் ஒரு நாட்டின் ஆதரவோடு, அந்நாட்டிலிருந்து நிழல் அரசை அறிவித்த வரலாறுகள் உண்டு. தமிழ் ஈழம் என்ற இறையாண்மை கொண்ட நாடு இனிமேல்தான் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு எந்த ஒரு நாடும் ஏற்பு வழங்காத நிலையில் 'நிழல் அரசு' என்பதற்கு மாற்றாக 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்' என்ற இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது தமிழ் ஈழத்துக்கான போராட்டத்தை சர்வதேச அளவில் முன்னெடுப்பதற்கான ஒரு போராட்ட அமைப்பு; அமையப் போகும் தமிழீழத்துக்கான அரசு அல்ல என்பதை இந்த அமைப்பின் பிரதமர் வழக்கறிஞர் உருத்திர குமாரன் தெளிவுபடுத்தியுள்ளார். நாடு கடந்த தமிழீழ அரசுக்கு ஆதரவளிக்கும் தோழமை மய்யம், தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த தோழமை மய்யத்தின் சார்பில் கடந்த 18.4.2013 அன்று சென்னையில் சந்திரசேகர் திருமண மண்டபத்தில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது.

தோழமை மய்யத்தின் சார்பில் முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு ஈழத்தில் பெண்கள் சந்திக்கும் கொடுமைகளை விளக்கும் ஆவணப் படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நியமன உறுப்பினரான வழக்கறிஞர் பாண்டிமாதேவி இயக்கி மற்றொரு நியமன உறுப்பினரான பேராசிரியர் சரசுவதி மேற்பார்வையில் உருவாக்கப்பட்ட இந்த 40 நிமிட ஆவணப்படம் சென்னை கருத்தரங்கில் திரையிடப்பட்டது. 'ஈழம் மண்ணில் எரியும் நெருப்பாய் தமிழ்ப் பெண்கள்' என்ற இந்த ஆவணப் படத்தை 'நாம் தமிழர் கட்சி' ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட எழுத்தாளர் சூரிய தீபன் பெற்றுக் கொண்டார்.

கருத்தரங்கின் மற்றொரு முக்கிய நிகழ்வு தமிழீழ சுதந்திர சாசன உருவாக்கம் பற்றியதாகும். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் 'தமிழீழ சுதந்திர சாசனம்' ஒன்றை வெளியிடவிருக்கிறது. எதிர்வரும் மே 15 ஆம் தேதி தொடங்கி 18 ஆம் தேதி வரை அமெரிக்காவில் பென்சில்வேனியா நகரில் நிகழ இருக்கும் மாநாட்டில் இந்த பிரகடனம் முரசறையப்படவிருக்கிறது. இந்த பிரகடனம் உலகத் தமிழர்களின் கருத்துகளைக் கேட்டு, அதனடிப்படையில் உருவாக்கப்பட இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்காக உலகத் தமிழர்களின் கருத்துகளைக் கோரும் 34 கேள்விகளைக் கொண்ட கேள்விக் கொத்து தயாரிக்கப்பட்டு உலகத் தமிழர்கள் அனைவரின் கருத்துகளும் கேட்டறியப்பட்டு வருகின்றன. இந்த 'சுதந்திர சாசனம்' நாடு கடந்த தமிழீழ அரசின் அறிவிப்பு அல்ல. மாறாக உலகத் தமிழர்களின் ஒருமித்த கருத்தாகும். இதே போன்ற சுதந்திர சாசனத்தை (Freedom Charter) தென்னாப்பிரிக்கா, பாலஸ்தீனம் போன்ற நாடுகளும் முரசறைந்துள்ளன என்பது வரலாறு.

இதன் நோக்கத்தை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் விளக்கி வெளியிட்டுள்ள அறிக்கை:

இந்த விடுதலை சாசனம் விடுதலை வேட்கைக்கான குறியீடாகும். மக்கள் தங்களுக்கான விடுதலையை கோருவதற்கான உரிமையை வலியுறுத்துவதோடு தங்களுக்காக அரசினை அமைக்கவும் ஆட்சி நடத்துவதற்கான ஆளுமையையும் வெளிப்படுத்துகிறது. இப்படி ஒரு சுதந்திர சாசனத்தை உலக நாடுகள் முன் ஆவணமாக முன் வைக்கப்படுவதால் சுதந்திரத்துக்கான பயணத்தை முன்னெடுப்பதற்கான செயல்முறைக்கு இது ஒரு தொடக்கப் புள்ளியாகிறது.

முள்ளி வாய்க்கால் படுகொலைக்குப் பிறகு தமிழீழ மக்கள் தங்களிடம் மண்டியிடுவார்கள் என்று சிங்கள அரசு எதிர்பார்த்தது. ஆனால், தமிழீழ மக்கள் அதற்குத் தயாராக இல்லை என்பதை செயல்பூர்வமாக உணர்த்தி வருகிறார்கள். சர்வதேச நாடுகளும், 'தமிழீழ நாடு' கனவாகிவிட்டது என்று கூறி ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வுகளைத் திணிக்க முயன்று வருகின்றன. தாயக தமிழ் ஈழத்தில் ராணுவத்தினர் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் மக்கள் தங்களின் 'சுதந்திர வேட்கை'யை வெளிப்படுத்திட இயலாதவர்களாக உள்ளனர். இதைப் பயன்படுத்தி 'தமிழீழ அரசு' உருவாக்கத்தைத் தடுத்திடவே சர்வதேச நாடுகள் முயற்சிக்கின்றன. புலம் பெயர்ந்த தமிழர்கள் அவர்கள் சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு இருப்பதால் தமிழீழத்தை வலியுறுத்துகின்றனர் என்றும், இலங்கை அரசின் கீழ் வாழும் மக்களின் நெருக்கடிகளையும் ஆபத்துகளையும் கவனத்தில் கொண்டு சிங்கள தேசத்துடன் சமரசமாகப் போய்விடுவதே நல்லது என்றும் சிலர் எழுதியும், பேசியும் வருகிறார்கள்.

இத்தகைய திசை திருப்பும் முயற்சிகளுக்கு எல்லாம் இந்த சுதந்திர சாசனம் உரிய பதிலாக அமைகிறது. சிலர் கூறுவதுபோல் தமிழீழத் தனியரசு கோரிக்கை




இப்போது ஏதோ திடீரென்று வரலாற்று வெற்றிடத்திலிருந்து உருவாகியது அல்ல. சிங்களப் பேரினவாத அரசு ஈழத் தமிழர்களுக்கான தேசத்தின் உரிமையை, இருப்பை ஏற்க மறுத்து, எப்போது இன அழிப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியதோ, அன்றே உருவானதுதான் இந்த விடுதலை. அதன் வரலாற்றுத் தொடர்ச்சியே இந்த சாசனம். தமிழர்களின் தனித்துவமான 'இறையாண்மையை' சிங்கள ஆட்சியாளர்களும் ஏற்கவில்லை. சிங்கள அரசும் ஏற்கவில்லை. எனவே, இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் சிங்கள அரசின் நிலையில் எந்த மாற்றமும் வரப் போவதில்லை.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் எந்த அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டை அனைத்துலக சமூகம் ஏற்படுத்தினாலும் அதை சிங்களப் பேரினவாதம் முறியடிக்கும். இதுவே வரலாறு கற்றுத் தந்த பாடம். இந்த வரலாற்றுப் பாடத்தை புறந்தள்ளிவிட்டு இலக்கையும் செயல்பாட்டையும் நிர்ணயிக்க முடியாது. அதே வேளை, உலகில் ஏற்படும் மாற்றங்களையும் கவனத்தில் கொண்டு, சர்வதேசம் சுதந்திரத் தமிழீழ கோரிக்கையை புறந்தள்ளிவிடாத வழிமுறையில் ஜனநாயக நெறிமுறைகளுக்கு உட்பட்டு 'சுதந்திர தமிழீழ அரசு' எனும் கோட்பாட்டை வெளிப்படுத்தி ராஜ தந்திர வழியில் போராட்டப் பாதையை நெறிப்படுத்த வேண்டும்.

"ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் நலன் என்ற பார்வையோடு செயல்படும் சூழ்நிலையில் உடனடியாக தமிழீழத்துக்கு ஆதரவு காட்ட முன் வர மாட்டார்கள்தான். ஆனாலும் சர்வதேச அரசியலில் நிகழும் மாற்றங்கள் தமிழ் ஈழத்துக்கான சூழலை உருவாக்கும். முரசறையப்பட இருக்கும் இந்த சாசனம் இந்தப் புதிய அணுகுமுறைக்கு ஏற்ப இருக்கும்" என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிக்கையாக அறிவித்துள்ளது.

சென்னையில் நடந்த கருத்தரங்கத்தில் இந்த விளக்கத்தை முன் வைத்து பலரும் உரையாற்றினர். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரசுவதி தலைமை தாங்கினார். எழுத்தாளர் சூரிய தீபன், மு.சாத்தப்பன், தியாகு, பேராசிரியர் ஜவாஹிருல்லா, கொளத்தூர் மணி, சீமான் ஆகியோர் உரையாற்றினர். ஆவணப்பட இயக்குனர் வழக்கறிஞர் பாண்டிமாதேவி ஆவணப் படத்துக்கு உதவியோருக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

நிறைவாகப் பேசிய செந்தமிழன் சீமான், "ஏற்கனவே 'சோஷலிசத் தமிழ் ஈழத்தை நோக்கி' என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் ஒரு ஆவணத்தை வெளியிட்டப் பிறகு இந்த ஆவணம் தேவையா என்ற கேள்வியை எழுப்பினார். இதற்கு கருத்தரங்கின் தலைவர் பேராசிரியர் சரசுவதி மேடையிலேயே விளக்கமளித்தார். 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பிரகடனம் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் பிரகடனம் வெளிவந்தது. அதே சுதந்திர தமிழ் ஈழ பிரகடனத்தைத்தான் இப்போது மீண்டும் உறுதி செய்து கொள்வதற்கும் மாறியுள்ள சூழலில் உலக அரங்கில் முன்னெடுப்பதற்கும் இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளவும், ஒரு செயல் திட்டமாக முன் வைக்கப்படுகிறது. ஏற்கனவே முன் வைக்கப்பட்ட பிரகடனத்தின் மறு உறுதியாகவும் தொடர்ச்சியான செயல்பாடாகவுமே இதைப் பார்க்க வேண்டும்" என்று விளக்கமளித்தார்.

10 மணியளவில் கருத்தரங்கம் நிறைவடைந்தது. அரங்கம் நிரம்ப பார்வையாளர்கள் திரண்டிருந்தனர்.

(குறிப்பு: சாசன உருவாக்கத்திற்கான கேள்விகளை ww.tamileelamfreedom charter.org என்ற இணையதளத்தின் வழியாக தங்கள் பதிலைத் தெரிவிக்கலாம். பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.)

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கன்னியாகுமரியிலிருந்து கூடங்குளம் நோக்கி முற்றுகைப் பயணம்: கைது






அறிவியல் வளர்ந்த நாடுகளில் கூட அணு உலைகள் மூடப்பட்டு வரும் வேளையில், நிர்வாகச் சீர்கேடு மிகுந்தும், அறிவியல் தொழில் நுட்பத்திற்கு அயல்நாடுகளையே நம்பியிருக்கும் நம்நாட்டில் அணு உலைகளை தொடங்குவது ஆபத்தானது என்று தொடக்கம் முதலே பல எதிர்ப்புக் குரல்கள் வந்தபோதும், புகிசிமா வெடிப்புக்கு பின்னால் வீச்சாக போராட்டம் நடந்து வருகின்றது. அணு உலைக்கு எதிராக கூடங்குளத்தில் அங்குள்ள மக்கள் தொடர்ந்து நடத்தி வரும் அறவழி போராட்டத்திற்கு ஆதரவாகவும், மக்களின் போராட்டத்தை தமிழகம் தழுவிய அளவில் எடுத்துச்செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடும், சென்னையில் மாநாடு, பேரணி, மதுரை, பாளையங் கோட்டை, சென்னை சட்டமன்ற முற்றுகை என்று பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடத்திய கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்புச் சார்பாக, கூடங்குளம், கல்பாக்கம் அணு உலைகளை மூடக் கோரியும், போராடும் மக்கள் மீது பதிந்துள்ள பொய் வழக்குகளைத் திரும்பப் பெறக்கோரியும், கூடங்குளம் அணு உலையை முற்றுகையிடுவதற்காக, 20-04-2013 அன்று காலை கன்னியாகுமரி காந்தி மண்டபத்திலிருந்து, கூடங்குளம் நோக்கி முற்றுகைப் பயணம் துவங்கியது. கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பாக, தோழர் கொளத்தூர் மணி தலைமையில் புறப்பட்ட சுமார் 200 பேரையும் காவல் துறையினர் தடுத்து நிறுத்தி, கைது செய்து, கொட்டாரம் பகுதியில் உள்ள என்.என்.சி.ஆர் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்திருந்தனர். மாலை அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய கொளத்தூர் மணி அவர்கள், "கூடங்குளம் அணு உலைக்கு உபகரணங்களை அனுப்பி வந்த ஜீயோன் போடாஸ் என்ற நிறுவனத்தின் தலைவர், தரம் குறைந்த பொருட்களை பயன்படுத்தினார் என்ற ஊழல் குற்றத்திற்காக கடந்த ஆண்டே கைது செய்யப்பட்டார்; கடந்த ஜனவரி மாதம் கூட அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கம் இது குறித்து கேள்வி எழுப்பியது. இன்று வரை அதுபற்றி எதுவும் பேசாமல் இருந்த அணுசக்தி கழகம் இப்போது பேச தொடங்கியிருக்கின்றது.

அணு உலை ஒழுங்கு முறை ஆணையத்தின் முன்னாள் தலைவர் கோபாலகிருஷ்ணன், இது குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் எழுதிய பின்னால், நான்கு வால்வுகள் பழுதான நிலையில் உள்ளன அதை மாற்றிக்கொள்கிறோம் என்று இன்று சொல்லியிருக்கின்றார்கள். தொடக்கம் முதல் இதை மறுத்தே வந்தவர்கள், செய்தி வெளிவர வெளிவர ஒவ்வொன்றாக ஏற்றுக்கொள்கிறார்கள். மக்களின் உயிருக்கு ஆபத்து இருப்பது பற்றி அக்கறையற்ற அணு சக்திக் கழகம் மற்றும் அரசுகள் மீது கண்டனத்தை பதிவு செய்கிறோம் என்று கொளத்தூர் மணி தெரிவித்தார்.

## அம்பேத்கர் பிறந்த நாளில் கேரம் போட்டி

அம்பேத்கர் பிறந்த நாள் நினைவாக ஆலந்தூரில் கேரம் விளையாட்டுப் போட்டி காஞ்சிபுரம் கேரம் விளையாட்டுப் பயிற்சி மய்யத்தில் 14.4.2013 அன்று நடந்தது. போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு 17.4.2013 அன்று நடைபெற்றது. வெற்றிப் பெற்றோருக்கான பரிசுத் தொகை மற்றும் கோப்பைகளையும்; போட்டிக்கு உதவிய தோழர்களுக்கு பரிசுப் பொருட்களையும்; பங்கேற் பாளர்களுக்கு 'ஜாதி மறுப்பே சமூக நீதி' என்ற வாசகங்கள் அச்சிடப்பட்ட பனியன் சட்டைகளையும் விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் பெரியார், அம்பேத்கர் நூல்களையும் சென்னை கழகத் தோழர் குகன், தனது சொந்த செலவில் வழங்கினார்.

கேரம் விளையாட்டில் இந்திய அரசின் 'அர்ஜுனா' விருது பெற்ற ஒரே விளையாட்டு வீரர் மரியம் இருதயம் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பரிசுகளை வழங்கி உரையாற்றினார். போட்டியில் கவாஸ்கர் வெற்றிப் பெற்றார். பூவரசன் அடுத்த இடத் துக்கு வந்தார். அம்பேத்கர் பெயரில் கேரம் விளையாட்டுப் போட்டி நடப்பது இதுவே முதல்முறை என்று விழாவில் பங்கேற்ற பலரும் குறிப்பிட்டு தோழர் குகனின் பங்களிப்பைப் பாராட்டினர். பயிற்சி மய்யத்தின் செயலாளர் மார்ட்டின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

**விளையாட்டு நடந்த இடத்தில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள்:**

மனிதனாய் வாழ சட்டம் இயற்றி மனுதர்ம சட்டத்தை எரித்து அழித்தவர், அம்பேத்கர்!

"ஏற்றுக்கொள்" இந்திய அரசியல் சாசனத்தை அல்ல; விடுதலைக்கான உண்மை சாசனத்தை!

ஒடுக்கப்பட்ட மானுடம் அனைத்தும் உயர்த்திய கையுடன்...

நம்பிக்கைத் தெளிவிருந்தால் நடுவில் நிற்காதே; நட!

# பேராசிரியர் புல்லாரை விடுவிக்க சீக்கியர்– தமிழர்கள் இணைந்து போராட்டம்




பஞ்சாபில் சீக்கிய இன உரிமைகளுக்காகப் போராடிய குடும்பத்தைச் சேர்ந்த பேராசிரியர் புல்லார் மீது பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி தூக்கிலிட முனைந்துள்ள இந்திய அரசைக் கண்டித்தும், பேராசிரியர் புல்லாரை விடுவிக்கக் கோரியும் 21.4.2013 காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் மரணதண்டனைக்கு எதிரான மக்கள் கூட்டமைப்பு சார்பில் உண்ணாப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தை பேராசிரியர் சரசுவதி தொடங்கிவைத்து உரை நிகழ்த்தினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத் துணைத்தலைவர் குணங்குடி அனீபா, ம.தி.மு.க. வெளியீட்டுப் பிரிவு செயலாளர் வந்தியத்தேவன், நாம் தமிழர் கட்சி ராஜன், இனப்படுகொலைக்கு எதிரான இசுலாமியர் இயக்க ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் உமர்கயான், மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன், தமிழர் முன்னேற்றக் கழக ஒருங்கிணைப்பாளர் அதியமான் உள்ளிட்ட பல்வேறு அமைப்புத் தலைவர்கள் வாழ்த்துரை வழங்கிப் பேசினர்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் தமிழக இளைஞர் முன்னணி பொதுச் செயலாளர் க.அருண பாரதி போராட்டத்தில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். சென்னை சீக்கிய இளைஞர்கள் அமைப்பைச் சேர்ந்த பேஜ்தீப் சிங் உள்ளிட்ட சீக்கிய இனத் தலைவர்களும், இளைஞர்களும் இதில் பங்கேற்றனர்.


மாலை, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பழரசம் அளித்து உண்ணாப் போராட்டத்தை முடித்து வைத்தார். நிகழ்வை மரண தண்டனைக்கு எதிரான மக்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் செல்வராஜ் முருகையன், ஹரிஹரன் உள்ளிட்டோர் ஒருங்கிணைத்தனர்.

இப்போராட்டத்தில் தமிழின உணர்வாளர்களும், மனித நேயர் ஆர்வலர்களும் மட்டுமின்றி சீக்கிய இன இளைஞர்களும் பங்கேற்றனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# “கௌரவம்” – ஒரு பார்வை

தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தந்து வரும் பிரகாஷ் ராஜ்-ராதா மோகன் கூட்டணியில் வெளி வந்திருக்கிறது “கௌரவம்” திரைப்படம். தமிழ்நாட்டில் அனேகமாக அனைத்து அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் விவாதிக்கவே ஒதுங்கி நிற்கும் ஒரு பிரச்சினையை படத்தின் மய்யக் கருவாக்க துணிவுடன் முன் வந்திருக்கும் இந்தக் குழுவினரின் சமூகப் பார்வையை மனம் திறந்து பாராட்டியாக வேண்டும்.



பொறியாளர் பட்டம் பெற்று வெளிநாட்டுக்கு வேலை தேடிப் போக விரும்பாமல் சொந்த மண்ணிலே ஒரு தொழிலைத் தொடங்கி, பலருக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என்ற மனநிலை கொண்ட சென்னை நகரத்தைச் சார்ந்த ஒரு மேல்தட்டு, நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த இளைஞன். தன்னுடன் படித்த சண்முகம் என்ற பொறியியல் பட்டதாரியை பழைய நினைவுகளோடு சந்திக்க அந்த கிராமத்துக்குப் போகிறான். நண்பன் ஒரு ‘தலித்’ என்பது அவனுக்குத் தெரியும். “இரட்டைக் குவளை”களைக் கொண்டுள்ள தேனீர்க் கடையில் உட்கார்ந்து கிரிக்கெட், அரசியலை விவாதித்துக் கொண் டிருக்கும் உள்ளூர் ஆதிக்க சாதி “பெரிசு”களிடம் சண்முகம் வீடு பற்றி விசாரிக்கும்போது ‘பெரிசுகள்’ முகம் கடுகடுக்கிறது. “அப்படிப்பட்ட தேடுதல்களோடு வெளியூர்காரனாகிய நீ இங்கே வராதே; இந்த கிராமம் நான்கு புறமும் ‘சுடுகாடுகள்’ கொண்டது. உடனே ஊருக்கு கிளம்பு” என்று விரட்டும் தொனியில் பேசும்போது அதே தேனீர்க்கடையில் வெளியே நின்று ‘பிளாஸ்டிக்’ குவளையில் சண்முகத்தின் உறவினரான தேனீர் குடித்துக் கொண்டிருந்த மாசி என்ற தலித் இளைஞர் இதை கவனிக்கிறார். அவரே சண்முகம் வாழ்ந்த சேரிக்கு அழைத்துச் செல்கிறார். உள்ளூர் பெரும் புள்ளியான ஆதிக்கசாதி பசுபதியின் மகளை சண்முகம் காதலித்து ஊரைவிட்டே ஓடிப் போன செய்தி கிடைக்கிறது. அவர்களின் கதி என்னவென்றே தெரியவில்லை என்று சண்முகத்தின் தந்தை நண்பனிடம் கதறியழுகிறார்.

“எப்படியாவது எனது மகனை தேடிக் கொடுக்க மாட்டாயா?” என்று அந்த இளைஞனின் காலில் விழுந்து கெஞ்சுகிறார். தந்தையின் கண்ணீரால் மனம் பதைத்த அந்த இளைஞன், சண்முகத்தைக் கண்டுபிடிப்பதற்கு சபதம் ஏற்று சென்னை திரும்பி தனது மற்றொரு ‘பார்ப்பன’ சக நண்பனோடு அந்த கிராமத்துக்கு திரும்பி அங்கேயே கூடாரமடித்து நண்பனோடு சண்முகத்தை தேடத் தொடங்குகிறார். அதே ஊரில் தொழிற்சங்கத் தலைவராக உள்ள கம்யூனிஸ்ட் கட்சி தோழர் (நடிகர் நாசர்) ஒருவரை சந்திக்கிறார். கல்கத்தாவில் தொழிற்சங்கப் பணிகளுக்காக சென்றிருந்தபோது ஒரு வங்காளிப் பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டவர். ஒரு பெண் குழந்தையைப் பெற்று விட்டு அந்த வங்காளிப் பெண் மரணமடைந்து விட்டார். அந்தப் பெண் யாழினி, ஒரு வழக்கறிஞர். சண்முகத்தைத் தேடும் பணியில் அவர்களின் நண்பர் குழுவோடு வழக்கறிஞர் யாழினியும் இணைந்து கொள்கிறார். காவல் நிலையம், திருமணப் பதிவு நிலையம் என்று தேடுதல் விசாரணையை இந்த ‘இளைஞர் அணி’ தீவிரமாக்கும் நிலையில் உள்ளூர் ஆதிக்க சாதி குடும்பம் இவர்களை அச்சுறுத்தி குடியிருப்புகளுக்கு தீ வைத்து மிரட்டுகிறது. சவாலை எதிர்கொள்ள உறுதி ஏற்கும் இந்த இளைஞர் குழு தங்களோடு படித்த பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த சக மாணவர்களையும் மாணவிகளையும் மின்னஞ்சல், இணையதளம் வழியாக தங்களின் இந்த நீதி கேட்கும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கிறது. பெரும் பொறியியல் பட்டதாரிப் படையே கிராமத்துக்கு திரண்டு வருகிறது. பக்கத்து கிராமத்தைச் சார்ந்த இளைஞர்களும் தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். ஒன்றுபட்ட இளைஞர்களின் தீவிரமான செயல்பாடுகளால் உண்மைகள் அம்பலமாகின்றன. தலித் சண்முகமும் ஆதிக்கசாதிப் பெண் ராஜேஸ்வரியும் ஒருவரை யொருவர் விரும்பி காதலித்து ஊரை விட்டே வெளியேற முயற்சிக்கும் போது அவர்களை ஆதிக்க சாதி குடும்பத்தினரே குடும்ப கவுரவத்துக்காக கொலை செய்து கிராமத்தில் புதைத்த உண்மைகளை இந்த இளைஞர் படை அம்பலப்படுத்துவதுதான் கதை.

படத்தின் கருவாக எடுத்துக் கொண்ட ஜாதி பிரச்சினை சமூகத்தில் பதட்டத்தை வெடிக்கச் செய்யக் கூடியது என்ற கவலையோடும் எச்சரிக்கையோடும் படத்தின் திரைக்கதையை இயக்குனர் உருவாக்கியிருக்கிறார். ‘சண்முகம்-ராஜேசுவரி’ காதலர்கள் ஜாதிவெறிக்கு பலியானாலும் அவர்களைப் பற்றிய உண்மைகளைக் கண்டறியும் நிகழ்வுகளை துப்பறியும் பாணியில் விறுவிறுப்பாக இயக்குனர் நகர்த்திச் சென்றிருகிறார். தீண்டாமைக்கு எதிரான கருத்துகள் மிகவும் அளவோடு அதே நேரத்தில் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது ‘பிரச்சாரப் படம்’ என்ற முத்திரை விழுந்து விடாமல், இயக்குனர் எச்சரிக்கை காட்டியிருக்கிறார். திரைப்பட அரங்கிற்கு திரைப்படம் பார்க்க வரும் ரசிகர்கள் திரைப்பட ரசனையுடன் வருகிறவர்கள். எனவே நல்ல கருத்துகளை சரியான திரைப்பட வடிவத்தில் பார்வையாளர்களிடம் கொண்டு செல்லும்போது தான் முன் வைக்கப்படும் கருத்தும் வெற்றி பெற முடியும். அந்த வகையில் இந்தப் படம் வெற்றி பெற்றிருக்கிறது.

ஜாதி வெறியை எதிர்த்து நண்பனுக்காகப் போராடும் இந்த பொறியியல் பட்டதாரி இளைஞர்கள், நவீன வாழ்க்கை முறைக்கு பழகியவர்களாகவும், இளைய தலைமுறை யினராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். பழமையான ஜாதிய கட்டமைப்புக்கு எதிராக நவீன நாகரீக இளைய சமூகம் போராடுவதாக திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. (இதே கண்ணோட்டத்தில் தான் எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் என்று திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை இயக்கங்களையும் நடத்தி வருகிறது)

படத்தின் மற்றொரு முக்கிய அம்சம் - ஆதிக்க ஜாதிக் குடும்பத்தைச் சார்ந்த பெண்களே இத்தகைய படுகொலைகளை ஆதரிக்காமல் குற்றவாளிகளை கண்டுபிடிக்க உதவ முன் வருவதாகும். ஆதிக்க ஜாதி ஆண்களிடம்தான் இத்தகைய கொலை வெறி தலைதூக்கி நிற்கிறதே தவிர, அவர்கள் ஆதிக்கத்தின் கீழ் ஆட்பட்டுக் கிடக்கும் பெண்களிடம் அத்தகைய மனநிலை கிடையாது என்பதையும் ஜாதிகளைவிட, இந்தப் பெண்களிடம் பாசமும் மனித நேயமும் தான் உள்ளார்ந்த உணர்வாக இழையோடிக் கொண்டிருக்கிறது என்பதையும் துல்லியமாக உணர்த்தியுள்ளனர். அதே நேரத்தில் தீண்டப்படாத சேரி வாழ் மக்களேகூட தங்களுக்குக் கீழான ஜாதியை ஒதுக்கி வைப்பதையும் நாசூக்காக தொழிற்சங்கத் தலைவர் நடத்தும் உரையாடல்கள் வழியாக இடித்துரைக்கப் பட்டுள்ளது.

படம் பார்ப்போர் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்து நிற்பவர் கதாநாயகனுக்கு (நடிகர் கிரிஷ்) உதவி செய்யும் சேரி வாழ் இளைஞர் மாசி; இயல்பாக அவர் உச்சரிக்கும் நறுக்கான வசனங்கள் ஜாதி வெறிக்கு விழுகிற சாட்டை அடி.

பள்ளிக் கூடத்திலே ஆசிரியர் ஜாதியைச் சொல்லி திட்டியபோது ‘சிலேட்டை’ எடுத்து ஆசிரியர் மண்டையில் அடித்துவிட்டு டிக்கட் எடுக்காமல் சென்னைக்கு ஓடி, சில ஆண்டுகளுக்குப் பிறகு கிராமத்துக்குத் திரும்பியவர் மாசி. இந்த கிராமத்து டீ கடையிலேதான் அவமானப்பட்டு டீ குடிக்கிறோம். சென்னையிலே எங்களை என்னா ஜாதின்னு எவனும் கேட்க மாட்டான் சார். சரவண பவன் ஓட்டலிலே போய் சாப்பிட்டுவிட்டு, பில்லையும் டிப்சையும் கொடுத்துவிட்டு வந்துகிட்டே இருப்போம் சார். எங்களுக்கு முதலில் சென்னை; பிறகு தான் சார் அன்னை என்று அவர் கூறும்போது கிராமங்களின் “பெருமை” ஜாதியில் தான் வாழ்கிறது என்ற உண்மை உணர்த்தப்படுகிறது.

இந்த கிராமத்துக்குள்ளே காரிலே போக வேண்டும் என்ற எனது நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிவிட்டீர்கள். நீங்கள் போட்டிருக்கிறது போல ஒரு கூலிங்கிளாஸ் போடணும்னு ஆசை என்று மாசி தனது ஆசையை நண்பர்களிடம் வெளிப்படுத்தியவுடன் நண்பன் தனது கூலிங் கிளாசை கழற்றித்தரும் காட்சியும், நீதிக்குப் போராடும் இளைஞர்கள் ஜாதி எதிர்ப்புப் பதாகைகளை தாங்கி வருவதும், காதலர்களின் பிணங்களின் படத்தில், இந்தப் பிணம் என்ன ஜாதி என்று எழுதி வைத்திருப்பதும், ‘நாம் ஒன்று சேரும் நேரம் புது சக்தி வந்து சேரும்’ என்று இளைஞர்கள் எழுச்சிப் பாடலைப் பாடும் காட்சியில் ‘கருப்பு சட்டை-நீல நிற ஜீன்ஸ் பேன்ட்’ அணிந்திருப்பதும், காலத்திற்கேற்ற நுணுக்கமான சித்தரிப்புகள். மகனைப் பறி கொடுத்த சண்முகத்தின் தந்தையாக நடிக்கும் பாத்திரம் உள்ளத்தைத் தொடுகிறது. இறுதி காட்சியில் ‘என்னுடைய சாவுக்கும் நீ தான் எனது மகனுக்கு பதிலாக வரவேண்டும்’ என்று கதாநாயகனிடம் கூறும்போது நெகிழ வைக்கிறார்.

சண்முகம் கொலை செய்யப்பட்ட உண்மை அறிந்து, தலித் கிராமமே சோகத்தில் மூழ்கும்போது, மாசி குடித்துவிட்டு பேசுவதாக வரும் காட்சி, சேரி மக்களின் வலியை ஆணி அடித்ததுபோல் சுருக்கென்று பதிய வைக்கிறது. கொடுமைகளை எத்தனை காலம் தாங்கிக் கொள்வது? நாங்கள் அடித்தால் மட்டும் ரத்தம் வராதா? என்று கோபத்தின் உச்சியில் பேசுவதும், சாதிக் கலவரத்தால் பாலுறவு வன்முறைக்கு உள்ளான தமிழரசி என்ற தலித் பெண்ணை 7 ஆண்டுகளாக எவருமே திருமணம் செய்ய முன் வராமல் இருப்பதை சுட்டிக் காட்டி கதறுவதும், கல் மனதையும் கரைய வைக்கும் காட்சி. உங்களில் ஒருவர் ஏன் அந்தப் பெண்ணை திருமணம் செய்து கொள்ள முன் வரவில்லை? என்று கோபத்துடன் கதாநாயகன் திருப்பிக் கேட்கும்போது, அந்தப் பெண் சம்மதித்தால் நான் திருமணம் செய்து கொள்ளத் தயார் என்று மாசி கூறுகிறார். இதில் பெண்ணின் சம்மதம் நிபந்தனையாக்கப்படுகிறது. அதேபோல், “ராஜேசுவரி என்னைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்; அவளை வேறு ஒரு சாதிக்காரன் திருமணம் செய்து விட்டால், அவனை உயிரோடு விடுவேனா?” என்று உறவுக்காரன் கதாநாயகனிடம் மிரட்டும்போது, “நீ விரும்பினால் போதுமாடா? அந்தப் பெண் விரும்ப வேண்டாமா?” என்று கதா நாயகன் பதிலடி தருவதும் பெண்ணுரிமைக்கான ‘பஞ்ச்’.

“என் மகள் விரும்பியவனை திருமணம் செய்து கொள்வது குற்றமா? அதற்காக அவளை கொலை செய்வீர்களா? பாவிகளே! உன் கவுரவம் போகிறது என்றால், நீ சாக வேண்டியது தானே?” என்று ராஜேசுவரியின் தாய் தனது கணவரிடம் ஆவேசத்துடன் கேட்பது, ஜாதி வெறிக்கு விழும் சாட்டையடி!

“பாரதி ராஜா காட்டிய கிராமத்தில் இத்தகைய கிராமங்களை நாங்கள் பார்க்கவில்லையே” என்று கதாநாயகன் கூறும் ஒற்றை வரி இயக்குனர் சிகரங்களுக்குள் மறைந்துள்ள ஜாதி வெறியை கிழித்துப் போட்டு விடுகிறது.

ஜாதி-தீண்டாமைக்கு எதிராக மக்களை சிந்திக்கச் செய்ய வேண்டிய இந்த படம் உணர்ச்சி அலைகளை உசுப்பிவிடக் கூடாது என்ற கவலையோடு இயக்குநர் ராதா மோகன் காட்சிகளை செதுக்கியிருக்கிறார். அதன் காரணமாகவே பாத்திரங்கள் பேசும் கருத்துகள் எல்லை மீறாது நியாயங்களை மட்டும் பேசுகின்றன. கூர்மையான வசனங்களை பாத்திரங்களின் இயல்புக்கேற்ப பேச வைத்திருக்கிறார் உரையாடலை எழுதிய விஜி. எவ்வளவு பாராட்டினாலும் தகும். பிரகாஷ்ராஜ் அழுத்தமான நடிப்பின் வழியே தனது முத்திரையைப் பதித்துள்ளார்.

கவுரவம் - வாழும் முறையிலிருந்து வருகிறதே தவிர, ஜாதியிலிருந்து வரவில்லை என்பதே படம் கூறும் சேதி!

தமிழ்த் திரைப்படத் துறைக்கு ‘கவுரவம்’ சேர்த்துள்ளனர் பிரகாஷ்ராஜ் குழுவினர். கிராத்தின் அழகை கவிதையாக படம் பிடித்துள்ளார் ஒளிப் பதிவாளர். அனைவருமே பாராட்டுக்குரியவர்கள்.

அடக்கப்பட்டவர்களின் வலியை மனித உறவுகள் வழியாக நெகிழ்ச்சியுடன் பேச வைத்திருக்கிறது “கௌரவம்”. பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய படம்.

**– இரா**

DATE OF PUBLICATION 24.04.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தீவிர களப்பணிகளில் கழகம்

### பயிற்றுவிப்போருக்கு பயிற்சி

கழகத் தோழர்களுக்கு, அடுத்த சில மாதங்கள் முற்றிலும் பயிற்சிக்கான மாதங்களாக அமைய உள்ளன. நமது தோழர்களை ஜாதி ஒழிப்பு, பாலின சமத்துவம், பொதுவுரிமை - பொதுவுடைமை, பெரியாரின் மக்கள் விடுதலை அமைப்பு, சர்வதேச அரசியலும் உரிமைப் போராட்டங்களும் என்பன போன்ற சில அடிப்படையான தலைப்புகளில் முழுத் தேர்ச்சிப் பெற்றவர்களாக உருவாக்கும் நோக்கில் 'தொடர் வகுப்பு'களை நடத்த உள்ளோம். பெரியார் காலத்தைப்போல் வகுப்புகள் திட்டமிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்பிற்கும் ஒரு பாடத் திட்டக் குழுவை அமைத்து, பாடத் திட்டத்தை உருவாக்க பயிற்சியின் போதே பாட நூல்களையும் வழங்கிவிடுவோம். வகுப்புகளை நடத்துவதற்கு முற்றிலும் புதிய தோழர்கள் தயாராகி உள்ளார்கள். சோதனை முயற்சியாக, கடந்த சில மாதங்களாக பல்லடம், கரூர், மேட்டூர் ஆகிய பகுதிகளில் புதிய பயிற்றுநர்களைக் கொண்டு வகுப்புகள் சிறப்பாக நடந்து முடிந்தன.

இந்தப் புதிய பயிற்றுநர்களை மேலும் சிறப்பாகப் பயிற்றுவிக்கவும், தோழர்களுக்கு கருத்துக்களை எளிமையாகச் சொல்லும் முறைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவும் வரும் ஏப்ரல் 27, 28 இரு நாட்கள் கொடைக்கானலில் "பயிற்றுநர்களுக்கான பயிற்சி வகுப்பு" நடைபெற உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்றுநர்கள் உருவாக வேண்டும் என விரும்புகிறோம். எனவே, தங்கள் மாவட்டத்தில் பயிற்சிக் கொடுக்கும் அளவுக்கு வாசிப்புப் பழக்கமும், பயிற்றுவிக்கும் அடிப்படைத் திறனும் கொண்ட தோழர்கள் இருந்தால் இந்தப் பயிற்சிக்கு அனுப்பி வையுங்கள். கழகத்தின் பொறுப்புகள் எதிலும் இல்லாதவராக இருந்தால் நல்லது. கட்டணம் ரூ.750.

**தோழமையுடன் : பால். பிரபாகரன், பரப்புரைச் செயலாளர்.**
**பேசி: 9865013393**

### கழகப் பொறுப்பாளர்களுக்கான பயிற்சி – மதுரை மண்டலம்

மதுரை மண்டலத்திலுள்ள தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்டக் கழகங்களில் உள்ள கிளை, நகர, ஒன்றிய, மாவட்டப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் ஜாதி ஒழிப்பு, பாலின சமத்துவம் ஆகிய தலைப்புகளிலும் இயக்க நடைமுறைகள் குறித்தும் மூன்று நாட்கள் வகுப்பு நடைபெற உள்ளது. ஏப்ரல் 30, மே 1,2 ஆகிய நாட்களில் கொடைக்கானலில் நடைபெறும் இந்த வகுப்புக்கான கட்டணம் ரூ.900. பொறுப்பாளர்கள் அவசியம் பங்கேற்க வேண்டும்.

**தொடர்புக்கு : சி. இராவணன், மண்டல அமைப்புச் செயலாளர், மதுரை.**
**பேசி: 9786889325**

### கழகப் பொறுப்பாளர்களுக்கான பயிற்சி – கோவை மண்டலம்

கோவை மண்டலத்திலுள்ள கோவை மாநகரம், புற நகரம், திருப்பூர் மாவட்டக் கழகங்களில் உள்ள கிளை, நகர, ஒன்றிய, மாவட்டப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் ஜாதி ஒழிப்பு, பாலின சமத்துவம் ஆகிய தலைப்புகளிலும் இயக்க நடைமுறைகள் குறித்தும் மூன்று நாட்கள் வகுப்பு நடைபெற உள்ளது. மே 17, 18, 19 ஆகிய நாட்களில் கொடைக்கானலில் நடைபெறும் இந்த வகுப்புக்கான கட்டணம் ரூ.900. பொறுப்பாளர்கள் அவசியம் பங்கேற்க வேண்டும்.

**தொடர்புக்கு : சி. விஜயன், மண்டல அமைப்புச் செயலாளர், கோவை.**
**பேசி: 9488179109**

## சென்னையில் ஒட்டப்பட்ட சுவரொட்டி

"கௌரவம்" படக்குழுவினர்களை
**பாராட்டுகிறோம்!**
போலி கௌரவங்களை அம்பலப்படுத்தி
சமுதாய கௌரவத்தைப் பேசும் "கௌரவம்"
தமிழ் சினிமாவுக்கே "கௌரவம்"
**சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம்**

### நன்கொடை

7.4.2013 அன்று குருவரெட்டி யூரில் நடைபெற்ற மனுசாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்க நிறைவு விழாக் கூட்டத்தில் குமாரபாளையம் தோழர் கா.சமரசன் மார்க்கம், புதுச்சேரி கோ.கௌதமி ஆகியோருக்கு நடைபெற்ற ஜாதி மறுப்புத் திருமண நிகழ்வின் மகிழ்வாக ரூ.1000 'புரட்சிப் பெரியார் முழக்க'த்துக்கு வளர்ச்சி நிதியாக வழங்கினர்.

11.4.2013 அன்று சேலம் தாதகாப் பட்டியில் கழகம் சார்பாக நடைபெற்ற மனுசாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்கப் பொதுக் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சிவசக்தி நகர் கே.சுப்ரமணி, கழக நிதியாக ரூ.1000 கழகத் தலைவரிடம் வழங்கினார்.

# ராமதாசுக்கு தமிழருவி மணியன் கேள்வி

ஜாதிய சக்திகளை அணி திரட்டும் மருத்துவர் இராமதாசின் போக்கை விமர்சித்து தமிழருவி மணியன் அவருக்கு ஒரு திறந்த 'மடலை' ஜூனியர் விகடனில் எழுதினார். இதற்கு பதிலளித்து மருத்துவர் இராமதாசு அதே இதழில் எழுதினார். இதற்கும் பதிலளித்து தமிழருவி மணியன் ஏப்ரல் 21 ஆம் தேதி 'ஜனியர் விகடனில்' எழுதியுள்ளார். அதிலிருந்து ஒரு பகுதி:

"சாதிச் சாயத்துடன் நீங்கள் சமூகப் பிரச்சினைகளை அணுகுவதில்தான் என்னைப் போன்றவர்கள் உங்களுடன் முரண்பட நேர்கிறது. என்னிடம் நீங்கள் கேட்டிருக்கும் மூன்று கேள்விகளும் மிக முக்கியமானவை. 'இந்திய விடுதலைக்குப் பிந்தைய 65 ஆண்டுகளில் நடந்த காதல் திருமணங்களால் சாதியற்ற சமுதாயம் உருவாகிவிட்டதா?' என்று கேட்கிறீர்கள். 'உருவாகி விடவில்லை' என்று வருத்தத்துடன் ஒப்புக் கொள்கிறேன். 'இந்த மண்ணில் ஈராயிரம் ஆண்டுகளாக நம் சாதி முறை சமய ரீதியாக, தத்துவ ரீதியாக, அமைப்பு ரீதியாக, மனுஸ்மிருதி போன்ற சட்ட ரீதியாக, சமூகக் கட்டுப்பாடாக மாறுதல்களே இல்லாமல், மாற்றவும் முடியாமல், இன்று வரை நிரந்தரமாக, இறைவனின் ஆணையாகக் கெட்டிப்படுத்தப்பட்டுவிட்டது. சாதிக்குள் மட்டுமே திருமணம் என்ற தவறான சமூகக் கட்டுப்பாட்டால், சாதிப் பரம்பரை, சாதிச் சடங்கு, சாதிக் கடவுள், சாதி ஆசாரம் என்ற வழிமுறை காரணமாக சாதித் தனித்துவம் உடைக்க முடியாதபடி இறுகிவிட்டது' என்ற ஞானையாவின் (மார்க்சிய எழுத்தாளர்) விளக்கம்தான் உங்கள் கேள்விக்குச் சரியான பதில். இப்படி இறுகிக் கெட்டிப்பட்டுக் கிடக்கும் சாதிய அமைப்பு நீடிப்பது உங்களுக்குச் சம்மதமா? இந்த மோசமான அமைப்பு முறையில் சமூக நீதி சாத்தியமா? 'காதல் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களில் எத்தனை பேர் தங்கள் குழந்தைகளைச் சாதியற்றவர்களாகப் பதிவு செய்திருக்கிறார்கள்?' என்று கேட்கிறீர்கள். காதல் திருமணம் செய்து கொண்டவர்களில் ஆண் சார்ந்திருக்கும் சாதியையே பிள்ளைகளுக்குப் பதிவு செய்யும் வழக்கம், ஆணாதிக்கத்தின் எச்சம். இதில் எனக்கு எப்போதும் உடன்பாடில்லை. ஒரு தனி மனிதன் சாதியைத் தவிர்க்க விரும்பினாலும் அரசு அவன் தலை மீது அதைத் திணித்து விடுகிறதே.... சட்டம் தானே சாதியைக் காப்பாற்றுகிறது? அதை எதிர்த்துப் போராடப் புறப்படுவோம்.

'நான் சாதி ஒழிப்புக் கிளர்ச்சிக்காரன். இந்திய அரசியல் சட்டத்தில் சாதிக்கும், அதை உள்ளடக்கிய மதத்துக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் தமிழர் நலனுக்காக வகுக்கப்படவுமில்லை. சட்டத்தைத் திருத்தக்கூடிய வசதி தமிழர்களுக்கு இல்லை. ஆதலால், என் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளும் அறிகுறியாக இச்சட்டத்தைக் கொளுத்துவதற்கு எனக்கு உரிமையுண்டு' என்று, பெரியார் மிகச் சரியாகச் சிந்தித்து, சட்ட எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதை நீங்கள் நினைத்து பார்ப்பது நல்லது.

சாதி என்பதே இருக்கக் கூடாது. சாதிப் பிரிவுகள்தாம் நம்மை ஒருவருக்கொருவர் ஒற்றுமையில்லாமல் ஆக்கி விட்டன. நாம் யாவரும் சமம் என்ற நிலை வரவேண்டும். ஆதி திராவிடர், ஹரிஜனம், தாழ்த்தப்பட்டவர், பறையர், பஞ்சமர், தீண்டாதவன், புலையன் ஆகிய பட்டங்களை ஒழித்தாலொழிய இப்பழங்குடி மக்கள் மனிதத் தன்மையுடன் வாழ முடியாது. தோழர்களே - திராவிடர் இயக்கம் தனது கடைசி மூச்சிருக்கும் வரையில் இந்நாட்டில் பள்ளன், பறையன் என்ற இழி சாதிகளை ஒழித்து அவர்களை முன்னேற்றவே உழைக்கும் என்ற உறுதியை வழங்குகிறேன்' என்ற பெரியாரின் பாதையில் உங்கள் பயணம் தொடர வேண்டும் என்பது என் பெருவிருப்பம்.

எனக்கு எள் மூக்கின் முனையளவும் சாதி உணர்ச்சி என்றும் இருந்ததில்லை. என் மகனும் மகளும், சாதி மதங்களை மீறிய மனிதம் சார்ந்து நடப்பவர்கள் என்பதில் எனக்குப் பெருமிதம் உண்டு. ஆனால், பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிலையிலும் சாதியை முன்னிறுத்தும் அரசியலமைப்பு மாற்றப்படாத வரை சாதிப் பதிவு தவிர்க்க முடியாதது. இன்றைய முதல் தேவை சாதியுணர்வு கொள்ளாமல் இருப்பது; சாதியை முன் வைத்துப் பூசலை வளர்க்காமல் சமத்துவம் காண்பது. இந்தப் பார்வை எனக்கும், என் பிள்ளைகளுக்கும் உண்டு. அனைவருக்கும் இது அவசியம் என்பதுதான் சமூக நீதிக்கான பாதை" - என்று ராமதாசுக்கு பதில் அளித்துள்ளார்.

## புது வண்ணையில் ஈழத் தமிழர்களுக்காக பொது மக்கள் போராட்டம்

சென்னை புதுவண்ணைப் பகுதி மக்கள் கூட்டமைப்பு சார்பில் 20.4.2013 அன்று காலை முதல் மாலை வரை ஈழ விடுதலை ஆதரவு 'உண்ணாவிரத'ப் போராட்டம் புதுவண்ணையில் எழுச்சியுடன் நடந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்களும் மாணவர்களும் திரண்டிருந்தனர். பழ.நெடுமாறன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இயக்குநர் புகழேந்தி, கி.த.பச்சையப்பன், திருமுருகன், காந்தி, மாணவ மாணவிகள் உரையாற்றினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 25th April 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.